


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 8ம் நாள் அன்று (24-12-2023 ஞாயிற்றுக்கிழமை) வெளியீடு +94 21 222 9722


## தை முதல் நாள் தமிழர் புத்தாண்டு அல்ல



தைத்திங்கள் முதலாம் நாள் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. இது மயங்கா மரபுத் தமிழர்களின் புத்தாண்டு அல்ல. தமிழர் புத்தாண்டு சித்திரை முதல் நாளே.

# இலங்கையில் மீண்டும் புத்துயிர் பெறும் சைவ விழாக்கள்

# மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்




மார்கழி மாதம் என்றாலே நினைவிற்கு வருவது விழாக்களும், பண்டிகைகளும் தான். அந்த வகையில் இம்முறை மீண்டும் புத்துயிர் பெறுகின்றது சைவ விழாக்களும், மாநாடுகளும். பல ஆண்டுகளுக்குப் பின்னர், தலைமுறை இடைவெளிகள் தாண்டி மீண்டும் புத்துயிர் பெறுவது எல்லாம்வல்ல திருவருளின் பெருங்கருணையே. வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கையில் பலவகையான சைவ விழாக்கள், போட்டிகள், திருமுறை முற்றோதல்கள் மற்றும் விண்ணப்பங்கள், குருபூசைகள், நால்வர் விழா, சேக்கிழார் விழா, கந்தபுராண படிப்புகள் மற்றும் விழாக்கள், முத்தமிழ் விழா என்று பட்டியல் நீளும். குறிப்பாக சைவ பாடசாலைகளிலும் இவ்வாறான விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.


இதன் தொடர்ச்சியை மீண்டும் உருவாக்க வேண்டும். குறிப்பாக மாணவர்கள் மத்தியில், இப்படியான விழாக்களை முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படைக்கு, இம்முறை நடைபெற்ற அகில இலங்கை சைவ மகா சபையினரின் **“திருமந்திர ஆன்மீக மாநாடு”** (28-10-2023), இலங்கை சைவநெறிக் கழகத்தினரின் **“சைவம் போற்றுதும்”** விழாவும் (10-12-2023) மற்றும் நடைபெற இருக்கின்ற தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையின் தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டு **“மார்கழிப் பெருவிழாவும்”** அத்திவாரமாக அமையும் என்பதில் ஐயமில்லை. இவ்விழாக்கள் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து நடைபெறத் திருவருள் துணைநிற்க வேண்டும் என்று எல்லாம்வல்ல ஐம்பூதநாதப் பெருமானிடம் விண்ணப்பம் வைக்கிறோம்.

அந்நாளில் இப்படியான திருவிழாக்களுக்கு மன்னர்கள் துணை நின்றது போல், தற்போது சில தொழிலதிபர்கள் மற்றும் சில செல்வமிகு அடியவர்கள் துணைநிற்பது பாராட்டுதற்குரியதாயினும், மற்றவர்களும் தாமே முன்வந்து இப்படியான விழாக்களுக்கு உதவவேண்டும். பாடசாலைகளில் கட்டடங்கள் மற்றும் வேறு தேவைகளுக்கு உதவிசெய்யும் பழையமாணவர்களும், மாணவர்கள் மற்றும் மாணவர் சங்கங்களிடையே விழாக்களை நடாத்துவதற்கும் உதவவேண்டும். குறிப்பாக சமய விழாக்களை மாணவர்கள் முன்னெடுக்க நாம் எல்லோரும் முன்னின்று உதவவேண்டும்.

கிரியைகள் மற்றும் விழாக்கள் பண்பாட்டினை வளர்க்க உதவினாலும் கிரியைகள் தற்போது நெறிவரையின்றி விரிவடைந்து தமிழ்மொழி சாரா வரம்பில் சென்று கொண்டிருப்பதால், நாங்கள் விழாக்களின் பக்கம் கூடிய கவனத்தினைத் திருப்பவேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து, மாணவர்கள் மத்தியிலும் இப்படியான விழாக்களை நடத்துவதற்கான ஊக்கத்தினை ஏற்படுத்த ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் அதிபர்கள் முன்வர வேண்டும்.

## சென்னையில் நடைபெற்ற பன்னிரு திருமுறைத் திருவிழா

சைவ நன்னெறியின் கருவூலமாக விளங்கும் திருமுறைகளை போற்றும் விதமாக தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் பன்னிரு திருமுறைத் திருவிழா கார்த்திகைத் திங்கள் 30 ஆம் நாள் (16-12-2023) சனிக்கிழமை அன்று இம்பா (IMPA) சமூக அமைப்பாலும், சைவ அடியார் திருக்கூட்டத்தாரினாலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. காலை 8.15 மணிக்கு மங்கல இசையுடன் தொடங்கிய விழாவில் தமிழ்நாட்டின் சிறப்பு வாய்ந்த ஓதுவா மூர்த்திகளான திருத்தணி சுவாமிநாத ஓதுவார், திருஞானசம்பந்த ஓதுவார், பழனி சண்முகசுந்தர ஓதுவார் போன்ற மூத்த ஓதுவார்களோடு இணைந்து 108 ஓதுவார்களின் திருமுறை சேர்ந்திசை நிகழ்வு மிக சிறப்பாக நடைபெற்றது. அதனைத்




தொடர்ந்து 108 திருமுறைப் பேழைகளுக்கு செந்தமிழில் மந்திரங்கள் ஓதி வழிபாடு நடைபெற்றது. தொடர்ந்து மாணவர்களின் திருமுறை இன்னிசையும் நடைபெற்றது.

பன்னிரு திருமுறை விழாவில் முக்கிய நிகழ்வாக அருள்தரும் எம்பிராட்டி அங்கயற்கண்ணி அம்மை உடனாய அருள்மிகு எம்பிரான் திருஆலவாயுடைய நாயனார் (சொக்கநாதர்) திருக்கல்யாண விழாவானது மதுரை திருக்கோயில் சிவாச்சாரியார்களைக் கொண்டு செய்விக்கப்பட்டது. இவ்விழாவிலே தமிழ்நாட்டின் சைவ ஆதீனங்களான திருவாவடுதுறை ஆதீனத்தின் தம்பிரான், தருமபுர ஆதீனம், மதுரையாதீனம், குன்றக்குடி ஆதீனம், செங்கோல் ஆதீனம், வேளாக்குறிச்சி

(03ஆம் பக்கம் பார்க்க)

# ஞானாசிரியர் பவானி தியாகராசன் ஐயா யாழ் வருகை

அரன்பணி புகழ் ஞானாசிரியர் சிவத்திரு.பவானி அ.தியாகராசன் ஐயா அவர்கள், தென்னாடு சைவ மாணவர் சபை நடாத்தும் மார்கழிப் பெருவிழாவில் கலந்துகொள்ள இலங்கை வருகிறார். அவர்கள் பவானி (திருநணா) சிவனடியார் திருக்கூட்டத்தின் தலைவராகவும் மற்றும் அரன்பணி அறக்கட்டளையின் தலை



வராகவும் மேலாக சைவ ஞானத்தினை உலகெங்கும் பரப்பிக்கொண்டிருக்கும் ஞானாசிரியராகவும், தமிழ்நாட்டில் இருந்து அரும்பணியாற்றி வருகிறார். ஐயா அவர்கள் தமிழ்நாடு மட்டுமல்ல, உலகெங்கும் செய்துவரும் சைவப் பணிகள் எண்ணிலடங்காதவை. சைவத்தமிழ் மரபில், தமிழ் வழிபாட்டு நெறிமுறைகளை அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்துவது மட்டுமல்ல அதன் ஆழத்தினை சைவசித்தாந்த மரபின் வழி விளக்கியும் வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மார்கழிப் பெருவிழாவில் சிறப்புரை ஆற்றுவதற்கும், வடக்கில் உள்ள சிதலமடைந்த திருக்கோயில்களைப் பார்வையிடுவதற்கும் ஐயா அவர்கள் இலங்கை வருகிறார்கள்.

# யாழ்ப்பாணம் நயினாதீவு அருள்மிகு நாகபூசணி அம்மைக்கு கடவுள் மங்கலம்




வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு அருள்மிகு நாகபூசணி அம்பாளின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவிற்கான ஆரம்பப் பூசையும், பந்தற்கால் நாட்டும் நிகழ்வும் கடந்த 07-12-2023 அன்று இறையருளோடு இடம்பெற்றன.

யந்திர பூசை, பந்தற்கால் நடும் கிரியைகளைத் தொடர்ந்து, 48 நாட்கள் மண்டல திருமஞ்சன கிரியைகள் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து வருகின்ற 2024ம் ஆண்டு தைத்திங்கள் 8,9ம் நாட்களில் (சனவரி 22, 23) நாகபூசணி அம்பாளுக்கு எண்ணைக்காப்பு கிரியைகள் இடம்பெற உள்ளது. தொடர்ந்து தைத்திங்கள் 10நாள் திருவருள் கூடிய விடைவான் வேளையில் நயினாதீவு அருள்மிகு நாகபூசணி அம்பாளின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா இடம்பெற திருவருள் கூடியுள்ளது. இதனை முன்னிட்டு ஆலய திருப்பணி வேலைகள் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஈழத்தின் வடபாகத்தின் அடையாளமாக திகழும் நயினை அம்மையின் செம்மாந்த சிவனாரமுதில் திளைத்திட நயினாதீவு அருள்மிகு நாகபூசணி அம்பாளின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் கூடிடுவோமாக.

திருச்சிற்றம்பலம்

# மன்னார் மடுப்பிரதேசத்தில் அமையப்பெற்ற இரண்டாவது சிவன் கோயில்



மன்னர் மாவட்டத்தில் சீர்மிகு சைவப்பெருமக்கள் சூழ்ந்து வசிக்கும் தட்சணாமருதமடு பாலம்பிட்டி கிராமங்களுக்கு மத்தியில் ஒருங்கிணைந்த பண்ணை கிராமத்தில் புதிதாக சிவன் திருக்கோயில் அமையப்பெற்றுள்ளது.

இப்பெரும் கைங்கரியமானது சிவன் அருள் இல்ல நிறுவுனர் சிவத்திரு. ஜெ. ஜெயமோகன் ஐயா அவர்களின் நல்லெண்ணத்தினால் நிறைவேறியுள்ளது. இத்திருக்கோயில் திருக்குட நன்நீராட்டுப் பெருவிழாவானது கடந்த கார்த்திகைத் திங்கள் 21ம் நாள் (07-12-2023) வியாழற்கிழமை அன்று இடம் பெற்றது. இத்திருக்குட நன்னீராட்டு பெருவிழா திருமஞ்சனத்தை திருக்கேதீச்சர தலைமை சிவாச்சாரியார் அவர்கள் சிறப்பாக ஆற்றியிருந்தார். தொடர்ந்து மண்டலத் திருமஞ்சனமும் சிறப்பாக இடம்பெற்றது.

முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட எம்பெருமானை நிறுவி அளப்பெரும் பணியாற்றியுள்ள சிவன் அருள் இல்ல நிறுவுனர் ஜெ. ஜெயமோகன் ஐயாவின் எண்ணம் போற்றுதலுக்குரியது. மேலும் தற்போது சிவனருள் இல்ல ஒருங்கிணைந்த பண்ணை முகாமையாளர் சிவத்திரு. பொ.கோகிலன் அவர்களின் மேற்பார்வையில் எம்பெருமானுக்கு நாள் பூசை வழிபாடுகள் இடம்பெற ஒழுங்கு செய்திருப்பதும் போற்றத்தக்க விடயமாகும்.

திருச்சிற்றம்பலம்

# நல்லை நாவலர் மணி மண்டபத்தில் ஆறுமுகநாவலர் குருபூசை



ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் சைவமும், தமிழும் அழிந்து விடாமல் காப்பாற்றுவதில் அர்ப்பணிப்புடன் பாடுபட்ட சீர் வளர்சீர் ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசை, கார்த்திகைத் திங்கள் 18ம் நாள் (04-12-2023) அன்று, நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வை அறநெறி தலைமை ஆசிரியர் திருமதி அனந்த லட்சுமி அம்மையார் தலைமையேற்று வெகு விமர்சையாக நடத்தியிருந்தார். இதன்போது அறநெறி மாணவர்களால் புராணப் படிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் மேலும் பல சைவசமய நலன் விரும்பிகள் மற்றும் அறநெறி மாணவர்கள் ஆகியோர் பங்குபற்றினர்கள்.

திருச்சிற்றம்பலம்

# தென்னாட்டில் ஆடல்வல்லானின் ஆதிரைக்காட்சியும் திருவீதியுலாவும்



எல்லாம் வல்ல ஐம்பூதநாதப் பெருமானின் திருவருளால் வழமை போல் இந்த ஆண்டும் திருவாதிரை விழாவானது, திருவீதியுலாவுடன் மார்கழித் திங்கள் 11 ஆம் நாள் (27-12-2023) அன்று நடைபெற உள்ளது.

மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (26-12-2023) செவ்வாய்க்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு எம்பெருமானுக்கு திருவாதிரை திருமுழுக்கு வழிபாடுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து அடுத்தநாள் காலை 4.30 மணிக்கு திருப்பள்ளியெழுச்சியுடன் பூசை ஆரம்பமாகி, 5.00 மணிக்கு எழுந்தருள் மண்டப பூசை இடம்பெறும். மண்டப பூசை முடிந்தவுடன் 5.30 மணிக்கு ஆடல் வல்லான் திருவீதியுலாவிற்கு எழுந்தருளல் இடம்பெறும்.

எம்பெருமான் திருவீதியுலாவாக தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயில் வாயிலில் இருந்து புறப்பட்டு, குளங்கரை வீதி வழியாக ஆடிய பாதம் வீதியை அடைந்து, பின்னர் ஆடிய பாதம் வழியாக அம்மன் வீதியை அடைந்து, அம்மன் வீதியில் உலா வந்து தென்னாடு வீதியை அடைந்து, தென்னாடு வீதி வழியாக காலை 6.30 மணியளவில் திருக்கோயிலை அடைவார்.

நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனாக விளங்கும் பெருமானை வீதி உலாவின் போது வரவேற்று வணங்கி பெருமானின் பேரருளைப் பெறுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

எம்பெருமான் திருக்கோயிலை அடைந்ததும், திருவாதிரை அருட்காட்சி வழிபாடு இடம்பெற்று அடியார்களுக்கு திருவமுதாக காலை உணவு வழங்கப்படும்.

திருச்சிற்றம்பலம்



தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்**

தலைமை ஆசிரியர் – தென்னாடு,

+6149949 3300, thennavan@thennadu.org




# பயத்தங்காயும் பருப்பும் போய் பன்னீரும் ரொட்டியும் வந்தது

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - திருக்குறள் 423**

தமிழர்களின் பண்பாட்டு நீட்சியானது பலவிடயங்களில் பிரதிபலிக்கும். வழிபாடுகள், திருவிழாக்கள், பண்டிகைகள், ஆடை ஆபரணங்கள், சடங்குகள் மற்றும் அதன்போது பரிமாறும் உணவுப்பண்டங்கள் என்று பலவாறு நீளும். இன்றும் பலவிடயங்களில் தமிழ் பண்பாட்டின் ஆழமும் நீட்சியும் வாழ்க்கை நீரோட்டத்தில் மிதக்கத்தான் செய்கிறது. உதாரணமாக எந்த விழாவானாலும் வாயிலில் கும்பம் வைக்கும் வழக்கம் தமிழர் பூமியெங்கும் இன்றும் இருக்கிறது. இதையொட்டியது தான் கடவுள் மங்கல நீராட்டு போன்ற விரிவான கோயில் சடங்குகள் ஆகும். இவையெல்லாமே தமிழ் வாழ்வியலில் இருந்துதான் உருப்பெற்றன.

அப்படித் தான் முதிர்ச்சியான ஒரு இனத்தின் உணவுப் பழக்கவழக்கங்களும் அமையும். அறுசுவை உணவை ஆழமாய் அறிந்து அதனை அன்றாட வாழ்வில் உட்கொண்டவர்கள் தமிழர்கள். அறுசுவைகளாகிய இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு என்பவற்றை தின்னல், உண்ணல், பருகுதல் மற்றும் நக்குதல் என்ற செயல்களால் உட்கொண்டனர் எம் முன்னோர்கள். இது பல்லாயிரம் ஆண்டுகளாய் நீட்சி பெற்ற உணவுப் பண்பாடு. இப்படியான உணவுப் பண்பாட்டினை தினமும் உட்கொள்ளாவிட்டாலும், பண்டிகை மற்றும் சடங்குகளில் ஆயினும் பண்பாட்டின் பிரதிபலிப்பை காட்டவே, தமிழர் உணவுகளை பகிர்ந்துகொண்டோம்.

ஆனால் தற்போதைய விழாக்களில் மற்றும் சடங்குகளில் இவை படிப்படியாக நலிவடைவதை புலம்பெயர் நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி காணக்கூடியதாக இருக்கிறது. இலைபோட்டு பயத்தங்காயும் பருப்பும் வைத்த காலம் போய் தற்போது நெகிழி (பிளாஸ்ட்டிக்) கோப்பைகளில் பன்னீரும் ரொட்டியும் பரிமாறும் காலம் எழுந்துள்ளது. செம்பில் நீர் கொடுத்து வரவேற்ற காலம் பொய், நெகிழி போத்தலில் நீர் கொடுக்கும் காலமாய் மாறியுள்ளது. பன்னீரும் ரொட்டியும் சாப்பிடவேண்டாமென்று சொல்லவில்லை, அதனை எங்கள் பண்பாட்டுச் சடங்குகளில் புகுத்தவேண்டாம் என்பதே எங்கள் விண்ணப்பம்.

எங்கள் பண்பாடு மேலும் நீட்சி பெறவேண்டுமாயின் எல்லா வழிகளையும், உணவுப் பழக்கவழக்கம் உட்பட நாங்கள் மாறாது இருக்கவேண்டும். நாங்கள் பலவகையான நாட்டு மற்றும் இன மக்களுடன் பழகும்போது, அதில் ஆதிக்கம் பெற்றுவிடுகிறோம். ஆனால் நாங்கள் சிறிது ஆழமாய்ச் சிந்தித்து எங்கள் பண்பாட்டு நிகழ்வுகளிலாவது, தமிழர் பாரம்பரிய உணவுமுறைகளைக் கடைப்பிடித்து, எங்கள் பண்பாட்டு நீட்சியை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச்செல்வோமாக.

## சென்னையில் நடைபெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதீனம், பேரூராதீனம், சிரவை ஆதீனம், மயிலம் பொம்மபுர ஆதீனம் ஆகியோர் எழுந்தருளி ஆசி வழங்கினர்.

திருமுறை விழாவில் இந்திய நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்து உரையாற்றினார். அவர் உரையாற்றுகையில் “வேற்றுமையில் ஒற்றுமையுள்ள” நாடாக இந்தியா உள்ளது. சிவனின் புனித பூமியாக காசி திகழ்கிறது. காசிக்கும் தமிழகத்திற்கும் நெருங்கிய தொடர்பு பண்டையகாலம் முதல் இருந்துள்ளது” என்று குறிப்பிட்டார். தொடர்ந்து பாராட்டு அரங்கம் மற்றும் திருமுறைப் பேழைகளை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. விழாவிலே சிவனடியார்கள், மத்திய மாநில அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அண்மைக்காலமாக திருமுறை சார்ந்த நிகழ்வுகள் தமிழகத்தில் நடைபெறுவது அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# யாழ்ப்பாணத்தில் திருமந்திரத்தை போற்றும் திருமந்திர ஆன்மீக மாநாடு



அகில இலங்கை சைவ மகா சபையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை இணைந்து ‘ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்திற்கு உயிர்கொடுப்போம்’ எனும் தொனிப்பொருளில் நடாத்திய திருமந்திர ஆன்மீக மாநாடு யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. இம்மாநாடானது கடந்த ஐப்பசித் திங்கள் 11ம் நாள் (28-10-2023) திருமூலர் குருபூசை நாளில் முன்னெ



டுக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேசுவரன் திருக்கோயிலில் காலை 8 மணியளவில் இடம்பெற்ற சிறப்பு வழிபாடுகளை தொடர்ந்து, திருமூலரின் உருவப்படம் தாங்கி, நிகழ்வு நடைபெறும் கைலாசபதி அரங்கிற்கு கொண்டு வருதலுடன் ஆரம்பமானது. இவ்விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்த துறைத்தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் அவர்கள் தலைமையேற்றுமுன்னெடுத்திருந்தார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக, தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் ஏற்பட்டில், இந்தியாவிலிருந்து ஒய்வு நிலை பேராசிரியர் கலாநிதி அருணை பாலறாவாயன் ஐயா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். மேலும் சைவப் பெரியோர்கள், சான்றோர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். கிழக்கு மற்றும் மலையகம் தழுவிய அடியார்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மாநாடு காலை, மாலை என இரு பகுதிகளாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததால், கலந்து கொண்ட அடியார்களுக்கான மதிய உணவும் வழங்கப்பட்டது.

ஒர் விடயம் முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் கல்விச் சமூகம் துணை நிற்றல் அவசியம். அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அண்மைக்காலமாக சைவவிழாக்களை முன்னெடுத்து வருவது போற்றுதலுக்குரியதாகும். இவ்வாறு இலங்கையில் சைவ விழாக்கள் புத்தெழுச்சி பெறுவது இறை திருவருளே. இன்னும் பல விழாக்கள் பல்கிப் பெருகிட சைவ அமைப்புகள் முன்வந்து, சைவத்தின் நிலைப்பு தன்மைக்கு துணை செய்வோமாக.

**திருச்சிற்றம்பலம்**



# சைவம் போற்றுதும் விழாவில் தலைநகரில் யானை மீது எழுந்தருளிய சைவத்திருமுறைகள்




இலங்கை சைவநெறிக் கழகத்தினரின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற "சைவம் போற்றுதும்" விழாவானது பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் கடந்த 2023-12-10 ஞாயிற்றுக்கிழமை அன்று வெகுசிறப்பாக இடம்பெற்று முடிந்தது. "தத்துவத்தையும் பண்பாட்டையும் இலக்கியத்தோடு இணைத்து சிவத்தமிழ் பருகும் திருவிழா" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இவ்விழா, பம்பலப்பிட்டி சம்மாங்கோடு மாணிக்கப்பிள்ளையார் கோயிலில் சைவசமய மரபில் சைவசமயப் பதிநூல்கள் சிவபெருமானின் திருமூர்த்தமாகப் பாவிப்பதினால் பன்னிரு திருமுறைகளுக்கும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களுக்கும் பூசைகள் செய்யப்பட்டு, இலங்கை சைவநெறிக் கழகத்தின் பொருளாளர் சைவத்திரு. கோ.இளையராஜா பன்னிருதிருமுறைகளினையும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களினையும் தம் தலையிற் சுமந்தவாறு யானைமேல் ஏறி, மங்கல வாத்தியங்கள் முழங்க பன்னிருதிருமுறை ஓதிவர, நகர்வலம் வந்து பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தினை அடைந்து, அங்கு திருப்பல்லாண்டு ஓதப்பட்டு, சிவத்திரு. கிருஷ்ண ஜனேந்திரக்குருக்களால் திருமுறைகளுக்கும் மெய்கண்டசாத்திரங்களுக்கும் சிவகாமி உடனுறை கூத்தப்பெருமானுக்கும் சிவபூசை செய்யப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாயின.

சொய்சாப்புரம் மெய்கண்டார் சைவசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களால் கொடிக்கவி பாடிட, சைவசமயக் கொடியான விடைக்கொடி சிவத்திரு. செ.முருகவேள் பெருமகனாரால் ஏற்றப்பட்டது. குரு, இலிங்கம், சங்கமம் (அடியவர்கள்) மூன்றிலும் சிவனைக் கண்டு வழிபடும் சைவர் மரபுப்படி, நிகழ்விற்கு எழுந்தருளியிருந்த தென்கயிலை ஆதீன குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் அருட்தவத்திரு அகத்தியர் அடிகளாருக்கு திருவடிப்பூசை கழகத் தலைவர் மரு. திரு. ஈசான கி.பிரதாப தேசிகரால் தீப வழிபாட்டுடன் செய்யப்பட்டது. திருமுறைக் கலாநிதி குமாரவயலூர் பாலச்சந்திரன் ஓதுவாமூர்த்திகளின் அவுஸ்ரேலியாவினைச் சேர்ந்த மாணவியர் சஷினி ரோஹறன், ஈஷா ரோஹறன் ஆகியோர் வழங்கிய திருமுறைப் பண்ணிசை முதலில் அரங்கேறியது. அம்மாணவியரின் பண்ணிசை நிகழ்வு பலரையும் மெய்மறக்கச் செய்து, திருமுறைத் தேனமுதாக விழாவுக்கு அருமையான பிள்ளையார் சுழியொன்றைப் போட்டது.

இலங்கை சைவநெறிக் கழகத்தால் நடாத்தப்படும் சொய்சாப்புரம் மெய்கண்டார் அறநெறிப் பாடசாலையின் அதிபர். திருமதி. சிவசோபனா வினோதரூபன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். திருவருளாசியுரையினை தென்கயிலை ஆதீன குருமகாசந்நிதானமும் சிவாசாரியக் குருவருளாசியுரையினை சிவத்திரு. கிருஷ்ண ஜனேந்திரக் குருக்களும் நிகழ்த்தினார்கள்.

பரத கலாவித்தகர் திருமதி. தாருண்யா கார்த்தியின் நெறியாள்கையில் மோ.கிரிஷா, மோ.லக்ஷ்மிதா ஆகியோர் இனிய சிவசத்தி நடனமொன்றை வழங்கியிருந்தனர். அதேபோல், பரத கலாவித்தகர் திருமதி. நிஜாந்தி சியாமளன் நெறியாள்கையில் மாணவியர் பலர் இணைந்து திருமுறைப்பாடல்களுக்குத் திருநடனம் புரிந்து, திருமுறைகளினைத் திருநடனத்தினூடாக சிறப்பித்தனர்.

மாணவர் அரங்கில் செல்வி ஜெயராஜ் சர்ஜனா, மூத்தோர் மனங்கள் வியக்குமாறு சைவ சமயச் சிறப்புகளைக் கூறி சிற்றுரை ஆற்றினார். ந.கவிஷால், ந.கிரிஷால் ஆகியோர் சமயம் தொடர்பான எளிமையான சந்தேகங்களை கற்றோரும் தெளியும் வண்ணம், **"ஐயம் தெளிதல்"** உரையாடலை நிகழ்த்தினர். முத்தாய்ப்பாக, லோஹிஸ் கணாத்ரா, லோஹிஸ் திரீஷ்மர் ஆகியோர் நாவலரின் வரலாற்றினைக் கதாப் பிரசங்கமாக நிகழ்த்தினர்.

இவ்விழாவில் அருமையான பல உரைகளும் மேடையேறின. **"அரன் கழல் செலுமே"** எனும் தலைப்பில் உரையாற்றிய சைவத்திரு. சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச் செல்வர், சைவப்புலவர் கார்த்திகைக்குமரன் சரவணமுத்து அவர்கள், சிறுவர்களுக்கும் புரியும் படி எளிமையான விதத்தில் உரையாற்றியிருந்தார். விழாவின் சிவநேய விருந்தினர் சைவ அறிஞர் சிவத்திரு. செயச்சந்திரன் முருகவேள் பெருமகனாரின் **"சைவ ஆகமங்களில் வித்யாபாதம்"** எனும் உரை, ஆழமான மெய்யியல் - தர்க்க ஆராய்ச்சிகளுடன் அவையோரின் சிந்தனைக்கு விருந்தாக அமைந்தது. நிகழ்வில் கலந்துகொண்டிருந்த கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. சாந்தி கேசவன் அம்மையார், சமகால சமூக - அரசியல் துறையில் பரவலாகப் பேசப்படும் **"அப்பர் தேவாரங்களில் இராவணன்"** எனும் சுவையான தலைப்பில் பேச்சொன்றை நிகழ்த்தியிருந்தார்.

தொடர்ந்து கழகத் தலைவர் ஆற்றிய தொகுப்புரையானது, இலங்கை சைவநெறிக் கழகத்தின் பத்தாண்டுப் பயணம், அதில் கழகத்தின் சாதனைகள், குறைந்த ஆளணியுடன் கழகம் ஆற்றும் பெரும்பணிகள், கழகம் முன்வைக்கும் நோக்கத்தின் எதிர்காலத்தேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ஆராய்ந்த சுருக்கமான உரையாக அமைந்தது. தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் முதல்வர் சிவத்திரு.தென்னவன் பார்த்தீபனார் சைவமக்கள் சைவசமயப்பணி செய்வோரினை உவந்துகொண்டாடுதல் வேண்டும் என்னும் பொருளில் வாழ்த்துரை நிகழ்த்தினார்.



சைவம் போற்றுதும் நிகழ்வில் மேடையேறிய இன்னும் இரு நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கவை. ஒன்று, மட்டக்களப்பு பருத்திச்சேனை கலைமகள் கலைக் கழகத்தினர் நடாத்திய **"மார்க்கண்டேயர்"** தென்மோடிக் கூத்து. மறைந்துவரும் ஈழத்து நாட்டார் கலையாடல்கள் மீதான தன் கரிசனையை இக்கூத்து அரங்கேற்றம் மூலம் இலங்கை சைவநெறிக் கழகம் சுட்டிக்காட்டியிருந்ததுடன், பாரம்பரிய மரபுப்படி ஆடப்பட்ட தென்மோடிக் கூத்து சபையோரால் பரவலாக பாராட்டப்பட்டது. அடுத்த நிகழ்வு **"சேக்கிழார்"** வில்லிசை. கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் பீட மாணவன் சிவத்திரு. வாமதேவ சிவசதீபன் நெறியாள்கையில் **"மதுரகவி"** குழுவினரால் நிகழ்த்தப்பட்ட வில்லுப்பாடலில், சேக்கிழாரின் வரலாற்றில் ஆரம்பித்து இலங்கை சைவநெறிக் கழகத்தின் சமய- சமூகப்பணிகளில் நிறைவுற்ற இலாவகம், பார்வையாளர்களின் பலத்த கைதட்டலைப் பெற்றிருந்தது.

இவ்விழாவில் யாழ்ப்பாணத்தில் சைவப்பணி ஆற்றும் அகில இலங்கை சைவமகா சபையின் செயலாளர் மரு. பரா.நந்தகுமாருக்கு **"சைவநெறிச் செல்வர்"** விருதும், மட்டக்களப்பில் சைவப்பணி ஆற்றும் அகில இலங்கை சைவப்புலவர் சங்க உபதலைவர் திருமதி. சிவானந்தஜோதி ஞானசூரியம் அம்மையாருக்கு **"சைவநெறிச் சுடர்"** விருதும் வழங்கப்பட்டன. இவர்களுக்கான கௌரவத்தினை விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா ஐயாவும் கழகத்தின் முன்னாள் காப்பாளர் தெய்வத்திரு.கதிர்காமநாதனின் துணைவியார் திருமதி. பரமேஸ்வரி கதிர்காமநாதன் அம்மையாரும் வழங்கிவைத்தனர்.

சைவம் போற்றுதும் விழாவில் இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. இலங்கை சைவநெறிக் கழகம் தமிழ்நாடு புனிதர் பேரவையோடு இணைந்து வெளியிட்ட **"இரௌரவ ஆகமம் வித்யாபாதம்"** அவற்றுள் முதலாவது நூல். இரண்டாவது நூல், **"சைவம் போற்றுதும் - 2023 விழா மலர்"**. இவ்விழாவில் ஓர் பகுதியாக பாடசாலை மாணவர்களுக்கான சைவசமய பொது அறிவுத் தேர்வு போட்டிகள் இடம் பெற்று, இதில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் திருவருள் முன்னிலையாக தென்கயிலை ஆதீன குருமகாசந்நிதானமும், சிவாசாரியக் குருவருள் விருந்தினராக யாழ். நல்லூர் சிவாகம பீடத்தின் தலைவர் சிவத்திரு. கிருஷ்ண ஜனேந்திரக் குருக்களும் கலந்துகொண்டிருந்தனர். சிவநேய விருந்தினராக தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி புனிதர் பேரவையின் தலைவரும் **"சுத்தசைவம்"** நூலாசிரியருமான சிவத்திரு. முருகவேள் செயச்சந்திரன் பெருமகனார் வருகை தந்திருந்தார். மாண்புறு விருந்தினர்களாக திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் பிரதித் தலைவர் திருமதி. அபிராமி கயிலாசபிள்ளை அம்மையாரும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீட இந்து நாகரிகத் துறையின் மேனாள் தலைவர் கலாநிதி. சாந்தி கேசவன் அம்மையாரும் சிறப்பித்திருந்தனர்.

பீடுடை விருந்தினர்களாக வெள்ளவத்தை நித்ய கல்யாணி ஜூவலர்ஸ் அதிபர் சிவத்திரு. அ. பி. ஜெயராஜா, வீரகேசரி பிரதம ஆசிரியர் சிவத்திரு. ச. ஸ்ரீகஜன், செட்டித்தெரு பூபாலசிங்கம் புத்தகசாலை நிர்வாக அதிபர் சிவத்திரு. இ. பூ. ஸ்ரீதரசிங் ஆகியோரும், திருச்சால்புடை விருந்தினர்களாக ஓய்வுநிலை நீதிபதி சிவத்திரு. ஜெ. விஸ்வநாதன், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட முதல்வர் சிவத்திரு. கு. பார்த்தீபன் ஆகியோரும் கலந்துகொண்டு மகிழ்வித்திருந்தனர்.

கழக உறுப்பினர்களின் அயராத முயற்சியின் பலனாய் அரங்கேறிய இவ்விழாவானது மெய்கண்டார் சைவசமய அறநெறிப் பாடசாலை மாணவர் திருமுறை ஓதியதும் கழகப்பண் இசைக்கப்பட்டு திருவருளுடன் நிறைவுற்றது. விழாவில் கலந்துகொண்ட அன்பர் அனைவருக்கும் மதிய விருந்து வழங்கப்பட்டது.

இவ்விழாவின் மூலம் "திருமுறைகளினையும் மெய்கண்ட சாத்திரங்களினையும்" தமிழர் தம் தலையில் வைத்துப்போற்றவேண்டும் என்னும் செய்தியினையும், சைவசமயம் என்னுஞ் சொற்பதத்தினை மீண்டும் செவ்வனே போற்ற வேண்டும் என்னும் உணர்வினையும் இலங்கை சைவநெறிக் கழகம் சைவத்தமிழ் உலகிற் பதிவுசெய்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

திருச்சிற்றம்பலம்



தென்னாடு

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் - கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தென்னாட்டு நிறைமதி அறிக்கை

(26-11-2023) - கார்த்திகைத் தீபத்திருநாளில் சிறப்பு வழிபாடுகள் தென்னாட்டில் இடம்பெற்றது.

(27-11-2023) - தென்னாடு திங்கள் இதழின் முப்பத்து ஒன்பதாவது இதழ் வெளியீடு கடந்த கார்த்திகைத் திங்கள் 11ம் நாள் நிறைமதியுடன் கூடிய நன்னாளில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஞானசம்பந்தன், தற்போதைய அதிபர் குமணன், பிரதி அதிபர் அசோக்குமார் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். இவர்களோடு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் உடைய அதிபர் அவர்களும் கலந்து சிறப்பித்திருந் தார்.

இந்நிகழ்வில் சிறப்பம்சமாக, நடைபெற்று முடிந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் முன்னிலை பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. அந்த வகையில் யாழ் மாவட்ட மட்டத்தில் முன்னிலை பெற்ற யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவி, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் முன்னிலை பெற்ற மாணவி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் முன்னிலை பெற்ற மாணவி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கு பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

(03-12-2023) - கொக்குவில் இந்துக் கல்லூரியில், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபையினால், சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பிலே ஒன்பது மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கடவுள் மங்கல சங்கு நீராட்டானது, கார்த்திகைத்திங்கள் 17ம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால் ஆற்றி வைக்கப்பட்டது.

(04-12-2023) - நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 18ம் நாள் கார்த்திகை மகம் நாண்மீனில் ஆறுமுகநாவலர் குருபூசை நாள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் இடம்பெற்றது.

(09-12-2023) - சிவத்திரு. சின்னத்துரை முத்துக்குமாரசாமி அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடு

(10-12-2023) - வண். பண்ணை ஓட்டுமடம் பகுதியில் அமையப்பெற்ற பாலவைரவர் திருக்கோயில் கடவுள் மங்கல நீராட்டானது தெய்வத்தமிழில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினரால் ஆற்றப்பட்டது. முதல் நாள் திருநிலைப்படுத்தல் மற்றும் சாந்தி வழிபாடுகள் இடப்பெற்று, காலை எண்ணைக்காப்பும் இடம்பெற்றது.

(10-12-2023) - கார்த்திகைத்திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் தென்னாட்டில் சிறப்பாக இடம்பெற்றது.

(14-12-2023) - சிவத்திரு. சின்னத்துரை முத்துக்குமாரசாமி அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடு

(16-12-2023) - இலங்கை சைவநெறிக் கழகத்தின் “ சைவம் போற்றுதும் “விழாவிற்காக இலங்கைக்கு வருகை தந்திருந்த சுத்த சைவம் நூலின் ஆசிரியர் சிவத்திரு செ.முருகவேள் ஐயா அவர்கள் மற்றும் அவருடன் வந்த அடியார்களும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்திற்கு வருகை தந்து ஐம்பூதநாதப் பெருமானை வழிபட்டனர். அதன்போது சம்பூரிலிருந்து வருகை தந்திருந்த சிவனடியார்கள் மத்தியிலும் உரையாற்றினார்.

(17-12-2023) - திருகோணமலை சம்பூர் வாழ் அடியார் பெருமக்கள் யாழ்ப்பாணத்திற்கு திருத்தலப்பயணம் மேற்கொண்டிருந்த வேளை, தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்திற்கு வருகை தந்து சிவபுராணம் பாடி வழிபாடு ஆற்றினார். அவர்களுக்கு காலை உணவு ஏற்பாடு செய்யப்பட்டு திருவமுது செய்விக்கப்பட்டது.

(18-12-2023) - திருவெம்பாவை முதல் நாள் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது. 5 மணிக்கு திருப்பள்ளியெழுச்சி பாடப்பட்டு பூசைகள் ஆரம்பிக்கப்பட்டு 5.30 மணிக்கு எழுந்தருளல் மண்டபத்தில் சிறப்பு வழிபாடுகள் இடப்பெற்றது. தொடர்ந்து இது இடம்பெற்று வருகின்றது.

திருச்சிற்றம்பலம்

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் - கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**திருவைந்தெழுத்து என்றால் என்ன? திருவைந்தெழுத்து எத்தனை வகைப்படும்?**

திருவைந்தெழுத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளினை உணர்த்தும் மந்திர எழுத்துக்களாகும். அதாவது, திருவைந்தெழுத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்களும் (அட்சரமும்) தனித்தனி மந்திரங்களாகும்.

ந திரோதானசத்தி
ம மலம் (ஆணவமலம்)
சி சிவபெருமான்
வா திருவருள் சத்தி
ய உயிர்

தூல பஞ்சாக்கரம் (பரு திருவைந்தெழுத்து) - நமசிவாய
சூக்கும பஞ்சாக்கரம் (நுண் திருவைந்தெழுத்து) - சிவாயநம
அதிசூக்கும பஞ்சாக்கரம் (மீநுண் ஐந்தெழுத்து) - சிவாய
காரண பஞ்சாக்கரம் (காரண ஐந்தெழுத்து) - சிவ
மகாகாரண பஞ்சாக்கரம் (பெருங்காரண ஐந்தெழுத்து) - சி

தூல பஞ்சாக்கரம் - சரியைநெறி சமயதீக்கையுடையவர் ஓதும்போது மந்திரப்பலனினை அளிக்கும். உலக இன்பம் (இம்மையிலும் மறுமையிலும் அபர இன்பம் பயக்கும்)

சூக்கும பஞ்சாக்கரம் - கிரியை, யோகம் நெறி விசேடதீக்கை(சிவதீக்கை) உடையோர் ஓதுவது சிறப்பாகும். உள்ளம் உலகியலில் நீங்கிச் சிவன்பாற் செல்லுதல்

அதிசூக்கும பஞ்சாக்கரம் - நிர்வாணதீக்கையுடையோர் ஓதுவது சிறப்பாகும். ஞானத்தில் - கேட்டலும் சிந்தித்தலும் உடையோருக்கு சிறப்பானது.

**பாசஞானம் நீங்குதல்**

காரண பஞ்சாக்கரம் - நிர்வாணதீக்கையுடையோர் ஓதுவது சிறப்பாகும் ஞானத்தில் - தெளிதல் கூடியோருக்கு சிறப்பானது. பசுஞானம் நீங்கித் திருவருளைப் பெறுதல்

மகாகாரண பஞ்சாக்கரம் (மகாமநு) - நிர்வாணதீக்கையுடையோர் ஓதுவது சிறப்பாகும். ஞானத்தில் - நிட்டை கூடியோருக்கு சிறப்பானது. சிவானந்தத்தில் மூழ்குதல்

**பஞ்சாக்கரம் ஓதுவதற்குரிய நியமங்களையும் பலன்களையும் விளக்குக?**

அதிசூக்கும, காரண, மகாகாரண பஞ்சாக்கரங்கள் யாவும் ஞான மார்க்கத்துக்குரியோர்க்கு என்பதால் முத்திப்பஞ்சாக்கரத்தின் வடிவங்களேயாகும்.

**நியமங்களை முறைப்படி ஒழுகாது ஓதுவோர்க்கு திருவைந்தெழுத்து பயன்தருமா?**

வலிமையுடைய ஒருவனும் வலிமையற்ற ஒருவனும் ஒரு கல்லினை ஆகாயத்தினை நோக்கி எறிந்தால் இரண்டுபேரினதும் கல்லுகள் எப்படியேனும் பூமியை வந்து அடைவது உறுதி. அதுபோல், நியமங்களோடு வாழ்ந்து ஓதுவாராயினும், நியமங்களை முறைப்படி ஒழுகும் பக்குவம் அற்றோராயினும் திருவைந்தெழுத்தினை பத்தியோடு ஓதுவோர்கள் நிச்சயம் பலனை அடைவார்கள். பட்டினத்துப்பிள்ளையார் அருளிய திருவிடைமருதூர் மும்மணிக்கோவை இவ்வுண்மையைத் தெளிவுபட உரைத்தருள்கின்றது.

**“தூசின் நல்லன தொடையிற் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும்
மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந் தோங்கி
இவ்வகை இருந்தோம் ஆயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது**

**சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறம்
நின்னது பெருமை அன்றோ என்னெனின்
வல்லான் ஒருவன் கைம்முயன்று எறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாஅக் கல்லேபோல்
நலத்தின் வழார்நின் நாமம்நவின் றோரே”** - 11ம் திருமுறை
(திருவிடைமருதூர் மும்மணிக்கோவை)

**பொருள்:-** ஐம்புலன்களும் நிறைவுபெறும்படி மனைவி, மக்கள், சுற்றத்தார் மகிழவும் இங்கு வாழ்கின்றோம். எனினும் மந்திரமாகிய திருவைந்தெழுத்தினை வாயினில் மறவாது ஓதி மனதினை உன் நினைவில் செலுத்துவதால், அதன் பலனாகிய முத்தியையும் இழக்கவில்லை. முதல்வனே, அத்தகு வல்லமை நின் பெருமையால் அல்லவா வந்தது. அது எங்ஙனம் எனில், வல்லான் ஒருவன் முயற்சிசெய்து எறிந்தாலும் வல்லமை அற்றவன் இயல்பாக எறிந்தாலும் நிலத்தில் விழும் கல்லைப்போல் நின் திருப்பெயரினைக் கூறுவோர் நலத்தினின்று வழுவார். நனி நலமே பெறுவர்.

வலிமையுடைய ஒருவன் வீசிய கல் அதிக தூரத்திலும் வலிமையற்றவன் வீசிய கல் குறைந்த தூரத்திலும் விழுவதுபோல், நியமங்களோடு ஓதுவோர் பூரணபலனைப் பெற்றுய்வர் என்பதும் இதனால் நாம் உய்த்தறிய வேண்டியதாகும். நியமங்கள் இன்றி ஓதுவோர் நியமங்களினைக் கைக்கொள்ளும் படி உயர்வர் என்பதும் உறுதி. அதேசமயம் நியமங்கள் எதுவும் அவசியம் இல்லையென்று ஆணவப்பிடிப்பில் நிற்போருக்கு திருவைந்தெழுத்து வெறும் ஒலியாகவே முடியும். ஏனெனில், இறைவன்பால் அன்பில்லாது எதனைச் செய்தாலும் அதனால் பலன் கிடையா என்பது சைவ முடிவு.

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# உய்வு பெறுவோம்!

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை முன்னெடுக்கின்ற மார்கழிப் பெருவிழா இம்முறையும் டிசம்பர் 25ஆம் திகதி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மிகுந்த இடர்பாடுகளுக்கு மத்தியிலே ஒரு விழாவை முன்னெடுக்கும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், அவ் இடர்களுக்கெல்லாம் மருந்தாய் சைவப் பெருமக்களின் வரவையே எதிர்பார்க்கின்றது. சிவனின் துணையன்றி வேறொன்றும் வேண்டாது நாம் முன்னெடுக்கும் இப் பெருவிழா, தமிழக அறிஞர்பெருமக்களும், ஈழத்து சால்புடைய அறிஞர்களும் இணைந்து சிறப்புற நடைபெறவிருக்கும் இவ்விழாவில் சிறப்பாக மாணவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் முகமாக 'மாணவர் அரங்கமாகப் பட்டிமன்றமும்' இடம்பெற இருக்கின்றது.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் மார்கழித் திங்கள் முழுவதும் சைவச் சிந்தனையை விதைக்கும் முகமாக பல்வேறு விழாக்கள் முன்னெடுக்கப்படுவது நாம் அனைவரும் அறிந்ததே. எனினும் ஈழவள திருநாட்டில் அங்ஙனம் மார்கழித் திங்களில் விழாக்கள் முன்னெடுக்கப்படுவது இல்லை என்ற பெரும் குறை எம்மிடத்தே உண்டு. ஈழத்துக் கோயில்களில் வழிபாடுகள் திருவாசக முற்றோதல்கள் இக்காலத்தில் சிறப்புற்றாலும் ஒரு நிறுவனமயப்பட்ட அளவில் பெருவிழா ஒன்றை நாம் முன்னெடுப்பதில் வரையறைகள் காணப்படுகின்றன. எனினும் இந்த சூழலில் தான் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மார்கழி பெருவிழாவை மூன்றாவது ஆண்டாக முன்னெடுக்கின்றது.

யாழ் மண்ணில், சைவத்துக்காக மட்டுமே முன்னெடுக்கின்ற தனித்த ஒரு பெருவிழாவாகத் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் முன்னெடுக்கின்ற மார்கழிப் பெருவிழாவையே அடையாளப்படுத்தலாம். இவ்விழாவை முன்னெடுக்க இந்த மண்ணில் உள்ள சைவத்தலைமைகள் துணைசெய்ய வேண்டுமல்லவா? ஆதரவும் உதவியும் நல்கி இப்பெருவிழாவை இன்னும் அழகுபடுத்த வேண்டுமல்லவா? கல்வி உயர் பீடங்களில் இருப்பவர்களும், சமூக அமைப்புக்களின் தலைவர்களும் இவ்விழாவை இன்னும் சிறப்புறச் செய்ய ஆதரவு தரவேண்டும் அல்லவா? எனவே இத்தலைமைத்துவங்களை வணங்கி எம் முயற்சிக்கு துணை செய்ய அழைத்து நிற்கின்றோம்.

கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சைவத்தமிழ் ஆர்வலர்கள் எல்லோரும் கூட்டமாக இணைந்து இப்பெருவிழாவுக்கு வருவதும், இன் தமிழ் அமுதையும், சைவத்தின் மாண்பையும் உணர்வதும் பெரும்பேறாகும். மார்கழித் திங்கள் மகத்துவம் நிறைந்த புண்ணிய காலம், வான் மழைபொழிந்து உலகுக்கு உயிர்ப்புக் கொடுக்கும் இனிய காலம், இக் காலத்தில் சைவத்தின் சிறப்பை எம் அடுத்த தலைமுறை பிள்ளைகளுக்கு கடத்துவதற்கு நாம் எடுக்கும் முயற்சிகள் காலத்துக்குத் தகுந்தவை என்பதை எல்லோரும் உணரவேண்டும். மிகுந்த பொருட்செலவிலும், இளையவர்களின் உழைப்பிலும் முன்னெடுக்கப்படும் இவ் பெருவிழாவை வெற்றியடைய செய்ய வேண்டியது எம் எல்லோருடைய கடமை என்பதை நாம் உணர்வோம்.

எமக்குள்ளே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். கடந்த கால செயற்பாடுகளில் எழுந்த முரண்கள் இருக்கலாம், அதிகார சட்டதிட்ட நியதிகளால் உருவாகும் தன் முனைப்புக்கள் இருக்கலாம். ஆனால் அனைத்தையும் கடந்து யாதொன்றிலும் தோய்வின்றி இருக்கும் பரம்பொருள் மீதான பத்தியும், சைவத்தை வளர்க்க வேண்டிய உணர்வும் இருத்தல் வேண்டும் அல்லவா? எல்லா எல்லைகளையும் தாண்டி இவ்விழாவுக்கு எம்மால் இயன்றதை சிறிதளவிலேனும் செய்யவேண்டும் என்ற உணர்வு எம்மிடத்தில் எழுந்தாலே அது பெருவெற்றியாகும். எம்முன் இருக்கும் வேற்றுமைகளைக் கடந்து, சிவனின் பெயரில் ஒன்றாகி உய்வு பெறுவோமாக!.

திருச்சிற்றம்பலம்

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளல்

மேலைத்தேயத்திலே ஆரம்பித்து உலகம் முழுவதிலும் பரவியிருக்கின்ற கைத்தொழில் மயமாக்கலின் விளைவாக பச்சைவீட்டு வாயுக்கள் பெருமளவில் வெளியேற்றப்பட்டு காலநிலை மாற்றம் துரிதமாக்கப்பட்டுள்ளது. $CO_2$, $CH_4$, $N_2O$, CFC, HFC, $SF_6$ முதலான பல வாயுக்களின் வெளியேற்றம், சூரியனிலிருந்து சிற்றலைக்கதிர்களாக வந்து நெட்டலைக் கதிர்களாக தெறிப்படையும் சூரியக்கதிர்களை பூமியிலே தக்கவைக்கின்றது. அதன் விளைவாக பனிமலை உருகி, கடல் மட்டம் அதிகரித்து உயிர்ப்பல்வகைமை அச்சுறுத்தலை எதிர்நோக்குவதோடு புவியின் காலநிலையும் சடுதியான மாற்றத்தை காட்டியுள்ளது. 'காலநிலை மாறினால் என்ன? மாறாவிட்டால் என்ன?' என்ற சிந்தனை இன்றைய இளைஞர்கள் பலருக்கு பொதுவாகவே காணப்படுகிறது. சமயத்தைப் பற்றிப் பேசுகின்ற இதழில் காலநிலை மாற்ற விளக்கம் ஏன் என்ற சலிப்பும் சிலருக்கு ஏற்பட்டிருக்கலாம்.

காலநிலை மாறி, வானம் பொய்த்து, மழைவளம் குன்றி, நிலம் வரண்டு போகுமாயின் கோயில்கள், வழிபாடு, பூசை என எல்லாவற்றையும் மக்கள் மூட்டை கட்டி வைத்துவிட்டு தங்களது உலக வாழ்வுக்கான அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் என்பவற்றில் மாத்திரம் தான் கவனம் செலுத்துவார்கள். கொவிட் பெருந்தொற்றுக் காலத்தில் சில கோயில்கள் காகம், குருவிகளின் வசிப்பிடமாக மாத்திரம் இருந்தது போலத்தான் நாத்திகம் பேசுவது போலல்லவா இருக்கின்றது. ஆனால் இதை முன்மொழிந்தவர் திருவள்ளுவர், வழி மொழிந்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு "

என்ற குறட்பாவிலே வானம் பொய்ப்பின் இறைவழிபாடே மறைந்து போகும் என்கிறார் கச்சியப்பரோ, வானம் சிறப்பாக மழையினைப் பொழிந்தால் வளங்கள் பெருகும், வளம் பெருகினால் அரசாட்சி செம்மை பெறும், அரசாட்சி செம்மை பெற்றால் உயிர்கள் சிறப்பாக வாழ்வதுடன் தவம், வேள்வி என்பன சிறந்து விளங்கி சைவசமயம் செழிக்கும் என்கிறார்.

"வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

எனும் அப்பாடலைத் தான் நாம் நாள்தோறும் சைவ வாழ்த்தாக பாடி வருகின்றோம். எனவே சைவ சமயத்தைப் பேணவேண்டுமாயின் காலநிலை மாற்றத்தை சீர்ப்படுத்த வேண்டிய தேவை சைவர்களுக்கு உண்டு. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு மண்ணோடு இணைந்த கற்கையும் சமயக்கற்கையோடு சைவசமயத்தில் வழங்கப்பட வேண்டும்.

காலநிலை மாற்றத்தை வெற்றிகரமாக எதிர்கொண்டு சீர்ப்படுத்த தேவையான விழிப்புணர்வு சைவசமயிகளிடையே ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக விவசாய இரசாயனப் பாவனையில் வெளிவிடப்படும் நைட்ரசு ஒக்சைட்டு ($N_2O$) 150 வருடங்கள் வரை புவியிலே நின்று நிலைத்து காலநிலை மாற்றத்தை தூண்டுகிறது. எங்களுடைய பண்பாடு சார் சேதனவிவசாயம் (Organic) மீட்டெடுக்கப்பட வேண்டும். இயற்கையோடு இணைந்த முறையில் வாழ்வியல் மாற்றியமைக்கப்பட வேண்டும். இவற்றை சைவசமயிகள் செய்யாது விட்டால், வேறு எவர் செய்யவல்லவர்? ஆகையால் சூழலைக்காக்கத் தேவையான விழிப்புணர்வை எம் சமயத்தினூடாக ஏற்படுத்தி வான்முகிலை வழாது பெய்யச் செய்து, மேன்மைகொள் சைவநீதியை உலகெல்லாம் சிறக்கச் செய்வோம்.

திருச்சிற்றம்பலம்

# தாய்மொழியாம் தமிழ்மொழியில் அர்ச்சனை

**சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**

**(தமிழ் அர்ச்சனை கடந்த திங்கள் தொடர்ச்சி)**

துறை மங்கலம் சிவப்பிரகாச அடிகள் தமது திருவெங்கை உலாப் பிரபந்தத்துள் சிவபெருமானை “வேத உணவு வெறுத்துப் புகழ்மூவர் ஓது தமிழ் ஊணுக்கு உழல் செவியான்” என வருணித்தார்.

**புனலில் ஏடு எதிர் செல்எனச் செல்லுமே
புத்த னார்தலை தத்துஎனத் தத்துமே
கனலில் ஏடுஇடப் பச்சென்று இருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்புபொன் பாவையது ஆக்குமே
சினஅரா விடம் தீர்கஎனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.**

**தலைகொள் நஞ்சமுது ஆக விளையுமே
தழல்கொள் வீடு தடாகமது ஆகுமே
கொலைசெய் யானை குனிந்து பணியுமே
கோள ராவின் கொடுவிடம் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவு தானும் கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியில் கல்லும் மிதக்குமே
அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.**

**வெங்கரா உண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை யானையின் மீதுஏறிச் செல்லுமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட்டு நிற்குமே
செங்கல் ஆனது தங்கமது ஆக்குமே
திகழும் ஆற்றிடச் செம்பொன் எடுக்குமே
துங்க வாம்பரி சேரற்கு நல்குமே
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே.**

**பெருகும் வையை தனைஅழைப் பிக்குமே
பிரம்ப டிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரிஎ லாம்பரி ஆக நடத்துமே
நாடி மூகை தனைப்பேசு விக்குமே
பரிவில் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே
பரமன் ஏடுஎழுதக் கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே.**

என்ற பழம்பாடல்கள் நால்வர் தமி ழால் விளைந்த அற்புதங்களை எடுத்துரைக்கின்றன.


திருமுறைத் தமிழ்ப் பெருமை பற்றி இன்னும் எத்தனையோ மேற்கோள்களைக் காட்டலாம். அவ்வாறிருக்க, இது பொழுது தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் **“தமிழில் அருச்சனை செய்யப்பட வேண்டும்”** என்று குரல் எழுப்பப்படுவதைச் சிலர் ஏன் எதிர்க்கிறார்கள் என்பது புரியவில்லை.

### அருச்சனைப் பலன்:

**“ஆரிய வழி அருச்சனை நெடுங்காலமாக இருந்து வருகின்றது் மாற்றலாகாது”** என்பவர்கள் ஒன்றை நினைவு கூர்தல் வேண்டும். **“யாதொரு செயலும் அது நல்லதாயினும் தீயாதாயினும் அறிந்து செய்தால் தான் பயனைத் தரும் அறியாது செய்தால் பயன்தராது”** என்பது சமயக் கோட்பாடு. மாணிக்கவாசகரும், **“சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின்”** என துதிப் பாடல்களைப் பாடும் பொழுது பொருள் தெரிந்து பாடுதல் வேண்டும்” என வலியுறுத்தினார்.

அறிந்து செய்யும் செயல்கள் **“புத்தி பூர்வகம்”** என்றும், அறியாத செய்யும் செயல்கள் **“அபுத்தி பூர்வகம்”** என்றும் சொல்லப்படும்.

திருக்கோயில்களில் அர்ச்சகர்கள் அன்பர்கட்காக அர்ச்சனை செய்யும்பொழுது முதற்கண்



தருமை ஆதீனப் புலவர்
முதுபெரும் புலவர் சித்தாந்தக் கலைமணி திருமுறை உரைமணி
திருநெறித் தமிழ்ச்சுடர் மகாவித்துவான் முனைவர்
உயர்திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.

செய்யப்படும் **“சங்கல்பம்”** என்பது அர்ச்சனை புத்திபூர்வகமாதல் வேண் டும் என்னும் கொள்கை அடிப்படையில் தான் செய்யப்படுகின்றது. ஆயினும், அதனை வடமொழியில் சொல்வதால், அருச்சனையின் பலனைப் பெற வேண்டியவர் தமக்குத் தெரியாத மொழியில் சொல்கின்றார். ஆதலின் அஃது எவ்வாறு புத்தி பூர்வமாக முடியும்? மேலும், **“இந்த அருச்சனையை நான் அர்ச்சகர் வழியாகச் செய்கிறேன்”** என்கின்ற வாசகத்தின் பொருளே அவருக்குத் தெரியாத பொழுது, அந்த அர்ச்சனை எப்படி அவர் செய்வதாக ஆகும்? ஆகாத பொழுது அதன் பயனை அவர் எப்படி அடைய முடியும்? அருச்சனையை விரும்பிச் செய்கிறவருக்கு அதனை நிஷ்பலத்ததாக அஃ தாவது பயனற்றதாக ஆக்குவதுதான் முறையோ? பொருளைத் தந்தவர்க்குப் பயன் பெறாத நிலையை உண்டாக்குவது நீதிக்குப் புறம்பான செயலுமாம் அன்றோ? ஆயினும் இவ்வாறான செயலே திருக்கோயில்களில் இப்பொழுது அன்றாட நிகழ்ச்சியாக நிகழ்ந்து வருகின்றது. “இதனை மாற்றவும் கூடாது என்கிறார்கள்.

### அருள்மொழி:

“ஆரிய வேதம் தொன்று தொட்டு அருள் மொழியாக வழங்கி வருகின்றது. ஆயினும் திருமுறைகள் பின்பு ஒரு காலத்தில் அருள் மொழிகளாகக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டது. அவை

சிவன் கோயில் அர்ச்சனைக்கு அல்லது விநாயகர், முருகன், உமையம்மை, இலக்குமி, சரசுவதி இவர்களுக்குச் செய்ய விரும்பும் அர்ச்சனைக்கு எப்படிப் பயன்படும்? என்று கேட்கலாம். அஃது உண்மைதான், என்றாலும் விநாயகர் முதலிய கடவுளருக்கும் துதிப் பாடல்கள் தமிழில் இல்லாமற் போகவில்லை, உள்ளன.

விநாயகருக்கு உரிய பாடல்கள் பதினொன்றாந் திருமுறையில் பல உள்ளன. மற்றும் ஔவையார் பாடிய விநாயகபுராணப் பாடல்கள் இவைகளும் உள்ளன. முருகனுக்குப் பரிபாடல், திருமுருகாற்றுப் படை, திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தபுராணம், கந்தர் கலிவெண்பா இவை உள்ளன.

தேவியர்கட்குத் திருமந்திரத்தில் பாடல்கள் உள்ளன. அபிராமியந்தாதி உமையம்மைக்கு மிகச் சிறந்ததாகும்.

திருமால் அர்ச்சனைக்குப் பரிபாடல், திவ்யப் பிரபந்தங்கள் ஏற்கனவேயுள்ளன. இங்கு ஒன்றை அறிதல் வேண்டும். அஃதாவது **“போற்றி”** என வரும் பாடல்கள் தாம் அருச்சனைக்கு உரியவை என்று வரையறை செய்தல் கூடாது. **“அர்ச்சனை பாட்டேயாகும்”** என்னும் சேக்கிழார் வாக்கில் **“பாட்டு”** என்றது போற்றிப் பாடல்களை மட்டுமே குறித்ததன்று. அகத்தியர் தேவரத்திரட்டில் சம்பந்தர், சுந்தரர் திருப்பதிகங்களுள் போற்றியல்லாத பாடல்களே **“அருச்சனை”** என்ற தலைப்பில் முன்பே திரட்டப்பட்டுள்ளன.

### சொல்லும் செயலும்:

திருக்கோயில்களில் அர்ச்சகர்கள் தங்களுக்குத் தமிழ்ப்பாடல்கள் மனப்பாடம் இல்லை என்று சொல்வார்களாயின், தனியார் வழிபாடாயினும், திருக்கூட்ட வழிபாடாயினும் அருச்சனை செய் வோர் தமிழ்ப்பாடல்களை முறையாகச்சொல்ல, அர்ச்சகர் பூவும் பச்சிலையும் திருவடி மேல் துவ லாம்.

எந்த வகையிலோ தமிழில் அருச்சனை செய்ய விரும்புவோருக்கு அவர்கள் விருப்பத்தை நிறை வேற்றி வைத்தல் கோயிலாருக்கும், அரசாங்கத்தா ருக்கும் தருமமும், நீதியுமாகும்.

ஆரியம் வாழ்வியல் மொழியாக இல்லாததை வைத்துச் சிலர் **“ஆரியம் கடவுள் வழிபாட்டிற்கென்றே ஆன்றோர்களால் உருவாக்கப்பட்ட மொழியாகும் அதனால் கடவுள் வழிபாட்டினை ஆரியம் அல்லாத வேறு மொழியால் செய்வது முன்னோர்க்கு இழைக்கும் குற்றமாகும்”** என்று இன்று புத்தம் புதியதொரு வழக்கினைத் தங்கள் படைப்பாகப் படைத்து முன் வைக்கின்றனர். அஃது ஒரு விநோதமேயல்லாது உண்மையாகாது.

ஏனெனில் ஆரியமொழி கடவுள் வழிபாட்டு முறை ஒன்றை மட்டும் சொல்லவில்லை. வழக்கத்தில் ஆரியம் வாழ்வியல் மொழியாய்ப் பயன்படாவிடினும் வாழ்வியற் பொருள்கள் பலவும் நூல்வடிவில் ஆரிய மொழியில் உள்ளன. தரும சாத்திரம், அர்த்தசாத்திரம், காமசாத்திரம், பரத சாத்திரம், சங்கீத சாத்திரம், சிற்ப சாத்திரம், மற்றும் அழிப்பு முறைச் சாத்திரம் முதலியனவும் இருத்தலால் ‘ஆரியம் கடவுள் வழிபாட்டிற் கென்றே அறிஞர்களால் படைக்கப்பட்டது’ என்பதில் துளியும் உண்மையில்லை.

மேலும் எவ்விடத்திலும் இயல்பாகத் தோன்றி வழங்கும் மொழியைத் தான் அறிஞர்கள் செப்பனிட முடியுமேயன்றி, அறவே இல்லாத ஒரு மொழியை எழுத்து வகையிலும், சொல்வகையிலும் யாரும் உண்டாக்கிவிட முடியாது. அதனால் ஆரியம் கடவுள் வழிபாட்டிற்கென்றே அமைக்கப்பட்டது’ எனச் சொல்லி உலக வழக்கிலும் வழிபாட்டு முறையிலுமுள்ள மொழிகளை வழிபாட்டு முறையினின்றும் நீக்கிவிட நினைப்பது நேர்மை யாகாது.

**திருச்சிற்றம்பலம்**

**தமிழ் அர்ச்சனை தொடரும்...**

**மூலம் : இலண்டன் சைவ மாநாடு சிறப்புமலர் 2004 - பக்கம் 47**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



### அருவுருவமான சிவலிங்க அமைப்பு எதனைக் குறிக்கிறது?

சுத்த மாயையில் இறைவனின் ஞான சத்தி பதிவதால் நாத தத்துவமும் கிரியா சத்தி பதிவதால் விந்து தத்துவமும் தோன்றுகின்றன. ஞானமும் கிரியையும் சமமாகப் பதிவதால் மூன்றாவது தத்துவமான சாதாக்கிய தத்துவம் தோன்றுகிறது. இத்தத்துவத்தில் நிற்கும் சிவன் சதாசிவம் எனப்படுவான். சதாசிவத்தைக் குறிப்பது சிவலிங்க வடிவம். இவ்வடிவத்தின் மேல் பாகமான நீள்வடிவம் நாதத்தையும் கீழ்ப்பாகமான வட்ட வடிவம் விந்துவையும் குறிப்பனவாக உள்ளன. (இறைவனது சத்தி சுத்தமாயையில் பதிவதால் ஒரு அசைவு தோன்றி நாதமும், ஒரு சுழற்சி தோன்றி விந்தும் தோன்றுகின்றன என்று முன்னைய பாடத்தில் விளக்கப்பட்டது. சிவலிங்கத்தின் மேலுள்ள நீள் கோட்டு வடிவம் இந்த அசைவையும் கீழ் வட்ட வடிவம் சுழற்சியையும் குறிக்கின்றன).

### நடராசப் பெருமானின் திருவடிவம் எதனைக் குறிக்கிறது?

ஆடும் பெருமானின் திருவடிவம் சிவனின் ஐந்தொழிலைக் குறிப்பது. அதனோடு, சிவனின் அசைவற்ற தன்மையையும் அசையும் தன்மையையும் (static and dynamic states) ஒரு சேரக் காட்டுவதாக இது உள்ளது. இது அவனின் சொரூப நிலையையும் தடத்த நிலையையும், சிவ சத்தி தத்துவத்தையும் குறிப்பதாகவும் உள்ளது.

ஆடும் கூத்தனின் உடுக்கை ஏந்திய திருக்கரம் காத்தலையும், அனலை ஏந்திய திருக்கரம் அழித்தலையும், முயலகன் மேல் ஊன்றிய திருவடி மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளளையும் குறிப்பன. உண்மை விளக்கம் என்ற சித்தாந்த நூல் இதனைத் தெளிவாக விளக்குகிறது. (இது தொடர்பான, 'தோற்றம் துடியதனில்' என்று தொடங்கும், உண்மை விளக்கப் பாடலை எடுத்தாண்டு ஈழத்துக் கலாயோகி ஆனந்தா குமாரசுவாமி அவர்கள் தனது உலகப் புகழ் பெற்ற Dance of Siva என்ற நூலை எழுதினார் என்பது குறிப்பிடத் தக்கது.)

### தட்சணாமூர்த்தியின் கைவிரல்களில் சுட்டு விரல் பெருவிரலை நோக்கி வளைந்திருப்பதன் தத்துவம் என்ன?

விரல்களின் இந்த நிலை சின்முத்திரை எனப்படும். இதில் சுட்டு விரல் பெருவிரலை நோக்கி வளைந்திருக்க, மற்றைய மூன்று விரல்களும் விலகித் தனித்திருக்கும். பெருவிரல் இறைவனையும் சுட்டு விரல் ஆன்மாவையும் குறிப்பன. நடுவிரல் ஆணவத்தையும் மோதிர விரல் கன்மத்தையும் சிறுவிரல் மாயையும் குறிப்பன. ஆன்மா இறைவனைச் சாரும் பொழுது அது முன்னர் மும்மலங்களைச் சார்ந்திருந்த நிலை விலகும். இதன் ஞான விளக்கமாக அமைந்து இதனைக் குறிப்பது சின்முத்திரை. சின்முத்திரை = சித் + முத்திரை. சித் - ஞானம், முத்திரை - அடையாளம். ஆன்மா மும்மலங்களை விட்டுவிலகி இறையருளைச் சார்ந்து நிற்கும் சாதனையைக் கொள்ள வேண்டுமென்று உணர்த்துவது சின்முத்திரை.

### இறை உயிர் உறவு

### இறைக்கும் உயிருக்கும் உள்ள உறவு எத்தகையது?

இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள உறவைச் சைவசித்தாந்தம் அத்துவித (அத்வைத)உறவு என்று கூறும். வேறு சில இந்திய தத்துவங்களும் இந்த உறவு பற்றிக் கூறுகின்றன. ஆனால் அத்துவிதம் என்ற சொல்லுக்கு அவை தரும் விளக்கம் சைவ சித்தாந்தம் தரும் விளக்கத்தின் வேறானது.

துவிதம் (துவைதம்) என்றால் இரண்டு என்று பொருள். அத்துவிதம் என்றால் இரண்டற்றது என்பது பொருள். இரண்டற்றது என்பதற்கு ஒன்று என்று பொருள்கண்டு, உயிரும் இறைவனும் ஒன்றென்றும், இறைவனின் ஒரு கூறு உயிர் என்றும் பொருள் காண்பது வேதாந்தத்தில் காணக்கூடியது. அத்துவிதம் என்பது இரண்டற்றது, ஆனால் ஒன்றல்ல என்று சைவ சித்தாந்தம் பொருள் காணும். இரண்டல்ல என்பது இரண்டுக்கு மேற்பட்டதையும் குறிக்கும்.

பதியாகிய சிவனுக்கும் பசுவாகிய உயிருக்கும் உள்ள உறவு மூன்று வகையாக உள்ளது என்பது சித்தாந்தக் கொள்கை. இறைவன் உயிருடன் ஒன்றாய் உடனாய் வேறாய் உள்ளான். ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்கும் மூன்றுவித உறவை சைவசித்தாந்தம் அத்துவித உறவு என்கிறது.

### இந்த மூவகை உறவையும் விளக்குக ?

எமது உடம்பில் ஒன்றாக உயிர் இருக்கிறது. இதே போல் இறைவனும் உயிருடன் ஒன்றாக இருக்கிறான். உயிர் உடம்பில் ஒன்றாக இருந்தாலும் அது உடம்பிலிருந்து வேறானது. இதேபோல் இறைவனும் உயிரிலிருந்து வேறானவன். உடம்புடன் உடனிருந்து உயிர் அதனை இயக்குகிறது. இதேபோல இறைவனும் உயிரோடு உடனிருந்து அதனை இயக்குகிறான்.

இங்ஙனம் ஒன்றாய், வேறாய். உடனாய் இறைவன் உயிருடன் உறவு கொண்டு அதனை வளர்க்கிறான்.

### அத்வைதம் பற்றியும் துவைதம் பற்றியும் பேசும் முக்கிய தத்துவங்களைக் குறிப்பிடுக?


இறைவன், ஆன்மா, உலகு என்னும் பொருள்கள் குறித்த கருத்து வேறுபாடுகள் அத்வைதம், துவைதம் பற்றிய கொள்கைகளுக்கு தளம் அமைத்துள்ளன. இறைவனும் ஆன்மாவும் ஒன்றுதான் இரண்டல்ல என்பது சங்கரரின் அத்வைதம். இதனைக் கேவாலாத்வைதம் என்பர். இறைவனும் உண்டு, ஆன்மாவும் உண்டு, ஆனால் ஆன்மாவுக்கு உள்ள உடம்பு போல் இறைவனுக்கு உடம்பாக இருப்பது ஆன்மா. இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள உறவு சரீரி - சரீரம் போன்றது, என்பது இராமானுஜரின் அத்வைதம். இது விசிஷ்டாத்வைதம் எனப்படும். இறைவனும் ஆன்மாவும் வேறுபட்ட இரு பொருள்கள் என்பது மத்வரின் துவைதம். சங்கரர், இராமனுஜர், மத்வர் ஆகிய மூவரின் தத்துவங்களும் வேதாந்த தத்துவத்தின் பிரிவுகளே. ஆனால் இன்று சங்கரரின் வேதாந்தக் கொள்கையே வேதாந்தம் என்று பொதுவாகக் கூறப்படுகிறது. அத்வைத வேதாந்தம், விசிஷ்டாத்வைத வேதாந்தம், துவைத வேதாந்தம் ஆகியவை இவர்களின் தத்துவங்கள். அத்வைதம் குறித்த சைவ சித்தாந்த விளக்கம் முன்னர் கூறப்பட்டது. இது சுத்தாத்வைதம் எனப்படும்.

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை**
**(கலாநிதி க.கணேசலிங்கம்)**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று – பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்






சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**

## அப்பரின் பசி தீர்த்த பைஞ்ஞீலிநாதர்

பழையாறையிலிருந்து புறப்பட்ட கலைவாய்மைக் காவலரான நாவரசப் பெருமான் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த்துறை போன்ற திருக்கோயில்களை வணங்கிய பின் திருப்பைஞ்ஞீலி திருக்கோயிலை வந்தடைந்தார். பயணங்களில் களைப்பு ஏற்படுவது என்பது இயல்பானது. அக்களைப்பினைப் போக்குவதற்காக நாம் உணவு உண்கிறோம். அவ் உணவினை நாம் எடுத்துக் கொண்டு போகிறோம் அல்லது அன்ன சாலைகளில் விலை கொடுத்து வாங்கி உண்கிறோம். அடியார் பெருமக்கள் திருக்கோயில் தோறும் சென்று திருமுறைகள் பாடி செந்தமிழை வளர்த்துக் கொண்டு, தன்னுடைய ஊனை வளர்ப்பதற்காகப் பெரிதாக எதையும் சேர்த்துக் கொள்ளாமல் நம்மை பார்த்துக்கொள்ள இறைவன் இருக்கின்றான் என்ற எண்ணத்தோடு தொடர்ந்து தொண்டாற்றி வந்தனர்.

அதிலும் மிகவும் சிறப்பு வாய்ந்தவரான உழவாரப்படையாளியாகிய நாவுக்கரசப் பெருமான், "தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்புவித்து தொண்டாற்றி வந்தார். அப்படியாக அயராது தொண்டாற்றி வரும் சமயத்திலே, அவருக்கு வயதின் காரணமாகவும், தொடர் பயணத்தின் காரணமாகவும் ஒரு களைப்பு உடலிலே ஏற்படுகிறது. உள்ளமோ இறைநினைப்பில் திளைக்கிறது. தன்னுடைய குழந்தைக்கு பசி என்ற உடன் தாயானவள் பசிக்கின்றதா என்று கேட்க மாட்டாள். உடனே அமுதன்ன பாலை ஊட்டுவாள். அதுபோலத்தான் நம் இறைவனாரும் அப்பர் பெருமானின் பசியைப் போக்குவதற்காக ஓடோடி வருகின்றான். எப்படி வந்தான் தெரியுமா? அடடா! அற்புதமான திருவிளையாடலை நுட்பமாக நிகழ்த்தினார் நம்பெருமான். பெந்தமெல்லாம் போக்கும் பெரியபுராணம் தந்த தெய்வச்சேக்கிழார் பெருமான் திருவாக்கில் அதனைக் காண்பது மிக சிறப்பானதாகும்.

**அப்பாடல்:**

வழிபோம் பொழுது மிகஇளைத்து வருத்தம் உறநீர் வேட்கையொடும்
அழிவாம் பசிவந்து அணைந்திடவும் அதற்குச் சித்தம் அலையாதே
மொழிவேந் தருமுன் எழுந்தருள முருகார் சோலைப் பைஞ்ஞீலி
விழியேந்தியநெற் றியினார்தந் தொண்டர் வருத்தம் மீட்பாராய். (304)

தொண்டரை எதிர்கொள்வதற்காக சோலையும் குளமும் ஏற்படுத்தி, திருநீறு பூசிய ஒரு அந்தணர் வடிவு கொண்டு பொதிசோற்றினையும் வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருக்கின்றான் எவ்வுலகையும் காக்கின்ற கண்ணுதல் பெருங்கடவுள். "தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்துள்ளார்" என்பதை இளையான்குடி மாறனாயனாரின் திருத்தொண்டின் ஊடாக நாம் அறியலாம். இங்கு அப்பருக்கும் அப்படியே இறைவனாரும், தம் தொண்டருக்குப் பிடித்த அமுதினைக் கொண்டு வந்து எதிர்கொண்டு நிற்கிறார். எப்படி ஒரு தாய் தன்னுடைய குழந்தைக்கு சோறூட்ட எந்நிலையில் நிற்பாளோ அதே அன்போடும், அன்பர்க்கு அன்பனாகவும் நிற்கின்றான் அப்பன் ஈசன்.

**பாடல்:**

காவும் குளமும் முன்சமைத்து காட்டி வழிபோங் கருத்தினால்
மேவுந் திருநீற் றந்தணராய் விரும்பும் பொதிசோறும் கொண்டு
நாவின் தனிமன்னவர்க்கு எதிரே நண்ணி இருந்தார் விண்ணின்மேல்
தாவும் புள்ளும் மண்கிழிக்குந் தனிஏ னமுங்காண் பரியவர்தாம். (305)

இன்னும் கூடுதல் சிறப்பாக இறைவனார் நாவரசப் பெருமானிடம் அமுது செய்யுங்கள் என்று சொன்ன அந்த வார்த்தை இருக்கின்றதே, எவ்வளவு இனிதான ஒன்று. நம்மவர் பண்பாட்டை நம் இறைவனாரே நமக்கு சொல்லிக் கொடுக்கிறார் என்று தான் இந்த இடத்தில் நாம் குறிப்பிட வேண்டும். அங்கு பொதிசோற்றுடன் நின்ற பெருமானார் களைப்பாக வருகின்ற ஆண்ட அரசரைப் பார்த்து, "மிக நீண்ட தூரமாக நடந்து வந்து கொண்டிருக்கிறீர்கள். இங்கு இருக்கின்ற இந்த பொதிசோற்றினை எடுத்து அமுது செய்துவிட்டு அருகில் இருக்கக்கூடிய இந்த குளத்தில் தாகத்தை தீர்த்துக் கொள்ளுங்கள்" என்று இறைவன் கூறுகின்றான். அங்கு பொதிசோறினை மட்டும் இறைவன் வைத்திருந்தால் அதனை நிச்சயமாக நாவுக்கரசுப் பெருமான் தொட்டு கூட இருக்க மாட்டார். தன் தொண்டருக்கு பசியை எப்படியாவது போக்கிவிட வேண்டும் என்பதற்காக அவன் அந்தணராக வடிவெடுத்து வந்து பொதி சோறை வைத்துக் கொண்டு குளம் சமைத்து காத்துக் கொண்டிருக்கிறான் என்றால்! இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது, இறைவன் நமக்காகவே இந்த உலகத்தைப் படைத்தருளி காத்து அங்கு தானும் எழுந்தருளி, தன்னுடைய கழல்களைக் காட்டி நாம் உய்வு பெறுவதற்காக காத்துக் கொண்டிருக்கின்றான். அதனை நாமெல்லாம் உணர்ந்து கொண்டோமானால் நிச்சயமாக அவனுடைய திருவடியில் அழுந்தி இருப்போம் என்பது திண்ணம்.

**இறைவனின் திருவாக்காக எழுந்த அப்பாடல்:**

"அங்கண் இருந்த மறையவர்பால் ஆண்ட அரசும் எழுந்தருள
வெங்கண் விடைவேதியர் நோக்கி மிகவும் வழிவந் திளைத்திருந்தீர்
இங்கென் பாலே பொதிசோறுண் டிதனை உண்டு தண்ணீர்இப்
பொங்கு குளத்தில் குடித்திளைப்புப் போக்கி போவீர் எனப் புகன்றார்.
(306)

சைவம் தான் பெற்ற புண்ணியக்கண் இரண்டில் ஒருவரான நாவரசப் பெருமான் களைப்பு நீங்கி நிற்கின்றார். தானாகவே எல்லாவற்றையும் அறிந்துக் கொள்ளக்கூடிய பெருமானார் நாவரசப் பெருமானிடம், "நீங்கள் எங்கு செல்ல வேண்டுமென" கேட்கின்றார். நாம் மேலே குறிப்பிட்டது போன்று, பசியோடு வருகின்ற ஒருவரை எதிர்கொண்டு, அழைத்து அவருக்கு அமுது கொடுத்து நலம் கேட்டல் என்பது நம்முடைய மரபு. நம் இறைவனாரும் நாமும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை அடியவர் வரலாற்றின் ஊடாக நமக்கு தெளிவுபடுத்துகிறார். உடனே இறைவனார் யானும் அங்கே தான் போகின்றேன் என்று உடன் வந்தார். எப்படியென்றால் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கக் கூடிய ஒருவரை படகில் வருகின்ற ஒருவர் காப்பாற்றி, நீங்கள் எங்கு செல்ல வேண்டும் என்று கேட்டு, நானும் அங்கு தான் செல்கின்றேன், உங்களை கரை சேர்க்கின்றேன் வாருங்கள் என்று அழைப்பது போன்று, இந்தப் பிறவிக் கடலிலும் இறைவனார் நம்மை அப்படித்தான் காப்பாற்றி காத்தருளி பேரின்ப நிலையை அருளுவான் என்பதனை அடியவர்களின் வாயிலாக நிகழ்த்தி காட்டுகிறான்.

**பாடல்:**

எய்ப்பு நீங்கி நின்றவரை நோக்கி இருந்த மறையவனார்
அப்பால் எங்கு நீர்போவது என்றார் அரசும் அவர்க்கெதிரே
செப்பு வார்யான் திருப்பைஞ்ஞீலிக்கு போவதென் உரைப்ப
ஒப்பி லாரும் யான்அங்குப் போகின்றேன்என்று உடன்போந்தார். (308)

உடன் வந்தவர் திருக்கோயில் வரவும் மறைகின்றார். ஏனென்றால் வரவேற்கவும் அங்கு பைஞ்ஞீலி நாதராக பெருமான்தானே இருக்க வேண்டும். தன் தொண்டரை வரவேற்பதற்காக அவன் முன் சென்றான். இதனை உணர்ந்த நாவரசர் பெருமானின் பேரருட் கருணையினை நினைந்து நைந்து உருகி அன்பினால் கூத்தாடி இறைவனார் விரும்புகின்ற தமிழ்மாலைகளை விரும்பிப் பாடினார்.

**திருப்பைஞ்ஞீலித் திருப்பதிகம்:**

உடையர் கோவணம் ஒன்றுங் குறைவிலர்
படைகொள் பாரிடஞ் சூழ்ந்த பைஞ்ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க்கு இல்லை அவலமே. (05.041.01)

திருச்சிற்றம்பலம்

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (301 - 310)**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அழகுமுலையம்மை உடனுறை வீழியழகர் திருக்கோயில் – திருவீழிமிழலை

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 6ஆவது திருக்கோயில் திருவீழிமிழலை

**"தன்றவம் பெரிய சலந்தரனுடலந் தடிந்த சக்கரம் எனக்கருள் என்று அன்று அரி வழிபட்டு இழிச்சிய விமானத்து இறையவன் பிறையணி சடையவன்"**

ஞானசம்பந்தருக்கும், அப்பருக்கும் இறைவன் படிக்காசு தந்தருளி அவர்கள் மூலமாகச் சிவனடியாருக்கு அமுதூட்டி அருள் வழங்கிய அற்புதத்தலமே அருள்மிகு அழகுமுலையம்மை உடனுறை வீழியழகர் உறையும் திருவீழிமிழலை திருத்தலம்.

**அமைவிடம்: திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு**

மயிலாடுதுறை - திருவாரூர் இருப்புப் பாதையில் பூந்தோட்டம் என்னுமிடத்தில் இருந்து தென்மேற்கே 10 கி. மீ தொலைவில் உள்ள தலம்,திருவாரூர், கும்பகோணம், பேரளம், ஆடுதுறை, பூந்தோட்டம் ஆகிய இடங்களிலிருந்து பேருந்தில் செல்லலாம்.

**இறைவர் திருப்பெயர்: நேத்திரார்ப்பணேசுவரர், விழியழகீசர், விழியழகர்.**
**இறைவியார் திருப்பெயர்: சுந்தரகுசாம்பிகை, அழகுமுலையம்மை.**
**கோயில் மரம்: வீழிச்செடி**
**தீர்த்தம்: விட்னு தீர்த்தம்.**
**வழிபட்டோர்: சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேந்தனார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், பிட்சாடனர், ரதிதேவி, வசிஷ்டர், காமதேனு, மனு முதலியோர்.**
**பாமாலை: சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேந்தனார்.**

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

**கண்ணிற் கனலாலே பொடியாகப்**
**பெண்ணுக் கருள் செய்த பெருமானுறைகோயில்**
**மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்**
**விண்ணிற் புயல்காட்டும் வீழிமிழலையே**
- (1-82-54)

### திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்

**நீற்றினைநிறையப் பூசி நித்தல் ஆயிரம் பூக்கொண்டு**
**ஏற்றுழி ஒருநாள் ஒன்று குறையக்கண் ணிறைய விட்ட**
**ஆற்றலுக் காழிநல்கி அவன் கொணர்ந்திழிச்சுங் கோயில்**
**வீற்றிருந்தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்தனாரே**
- 4-64-8)

### சுந்தர மூர்த்தி நாயனார் அருளிய திருப்பதிகம்

**விடங்கொண் மாமிடற்றீர் வெள்ளைச் சுருளொன்றிட்டுவிட்ட காதினீர் என்று**
**திடங்கொள் சிந்தையினார் கலி காக்குந் திருமிழலை**
**மடங்கல் பூண்ட விமானம் மண்மிசை வந்திழிச்சிய வானநாட்டையும்**
**அடங்கல் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே** - (7-88-2)

### திருத்தலச் சிறப்பு

இத்தலம் 23 திருமுறைப் பதிகங்களையுடையது. திருமுறை மட்டுமன்றி, சேந்தனாரின் திருவிசைப்பாவும், அருணகிரிநாதரின் திருப்புகழும் பெற்ற சிறப்புடைய தலமாகும். ஞானசம்பந்தருக்கும், அப்பருக்கும் இறைவன் படிக்காசு தந்தருளி அவர்கள் மூலமாகச் சிவனடியார்க்கு அமுதூட்டிய தலம். அவ்வாறு படிக்காசு வைத்தருளிய பலிபீடங்கள் கோயிலின் கிழக்கிலும், மேற்கிலும் உள்ளன. சம்பந்தரும், அப்பரும் தங்கியிருந்த திருமடங்கள் வடக்கு வீதியில் கீழ்க்கோடியிலும் (சம்பந்தர்) மேற்குக்



கோடியிலும் (அப்பர்) உள்ளன.

இறைவன், ஞானசம்பந்தருக்குத் தாம் சீகாழியில் இருக்கும் திருக்கோலத்தை இங்குள்ள விண்ணிழி விமானத்தில் காட்டியருளினார். இத்தலபுராணம், திருவாவடுதுறை ஆதீனத்து, இரண்டாவது குருமூர்த்திகளான சிறி மறை ஞானதேசிகருடைய மாணவரான சிறி மெய்ஞ் ஞான முனிவரால் இயற்றப்பட்டது - உள்ளது. இக்கோயிலிலுள்ள வெளவால் நத்து (வாவல் நெற்றி) மண்டபம் மிகச் சிறப்பான வேலைப் பாடுகள் உள்ளதாகும். கோயில் திருப்பணிகள் செய்யும் சிற்ப கலைஞர்கள் சில தலங்களில் உள்ள அரிய திருப்பணிகள் நீங்கலாகச் செய்யும் ஒப்பந்தங்களில இம் மண்டபமும் ஒன்றாகும்.

வெளவால் நத்தி மண்டபம் கல்யாண மண்டபமாக உள்ளது அழகான அமைப்பு - நடுவில் தூணில்லாமல், சுண்ணாம்பு கொண்டு ஒட்டப்பட்டுள்ள அமைப்பு - பார்ப்பவரை வியக்கச் செய்யும். இக்கோயில் மாடக் கோயில் அமைப்புடைது. சுவாமி உள்ள இடம் விண்ணிழி விமானம் என்று சொல்லப்படுகிறது. பதினாறு சிங்கங்கள் தாங்கும் சிறப்புடைய இவ்விமானம் திருமால் கொணர்ந்தது, என்பதனை **"தன்றவம் பெரிய சலந்தரனுடலந் தடித்த சக்கரம்"** என்ற சம்பந்தரின் வாக்கிலிருந்தும் அறியலாம்.

இறைவன் உமையை மணந்துக் கொண்ட தலம் என்னும நிலைக்கேற்ப, கருவறை வாயிலில் அரசாணிக்கால் என்னும் தூணும், வெளியில் மா (மகா) மண்டபத்தில் பந்தக்கால் என்னும் தூணூம் உள்ளன. இத்தலத்தில் தான் மிழலைக் குறும்பர் என்னும் வேடுவர் விளாங்கனியை நிவேதித்து அருள்பெற்றார். சம்பந்தரும், அப்பரும் படிக்காசுப் பெற்று அவற்றைக் கடைத்தெருவிற்குக் கொண்டு சென்று பொருள்களை வாங்கிய கடைத்தெரு இப்போது ஐயன்பேட்டை என வழங்கப்படுகிறது. அங்கே உள்ள இறைவன் பெயர் - செட்டியப்பர், இறைவி-படியளந்த நாயகி. எழுந்தருளல் வடிவாக தராசு பிடித்த கையோடும், அம்பாள் படியைப் பிடித்தக் கையோடும் காட்சித் தருகின்றனர்.

கோயில்மரம் ஒவ்வொரு யுகத்திற்கும் ஒவ்வொன்றாக உள்ளதாக சொல்லப்படுகிறது. முதலில் சந்தனமாகவும், பிறகு சண்பகமாகவும், பின் வீழிச்செடியாகவும் உள்ளது. அடுத்து இருக்கவுள்ளது பலாமரமாகும். இத்திருக் கோயிலைச் சுற்றி, தாமரைத் தீர்த்தம், புட்கரணி, விட்னு தீர்த்தம், திரிவேணி சங்கமம், குபேர தீர்த்தம், இந்திர தீர்த்தம், வருண தீர்த்தம், இலக்குமி தீர்த்தம், வசிட்ட தீர்த்தம் முதலாக 25 தீர்த்தங்கள் உள்ளன.

### திருத்தல வரலாறு

கோயிலின் எதிரில் பெரிய குளம் உள்ளது. எழுந்தருளல் வடிவம் - கல்யாண சுந்தரர். இத்தலத்தில், திருமால் சக்கரம் வேண்டி, இறைவனைப் பூசை செய்யும்போது ஒருநாள் ஒரு மலர் குறையத் தம் கண்ணையே இடந்து சாத்தி சக்கரத்தைப் பெற்றார். இவ்வரலாறு திருமுறையில் கூறப்பட்டுள்ளது.

**பங்கயம் ஆயிரம் பூவினி லோர் பூக் குறையத்**
**தங்கண் இடந்துஅரன் சேவடிமேற் சாத்தலுமே**
**சங்கரன் எம்பிரான் சக்கரமாற்கருளிய வாறு**
**எங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடோமோ**
- திருவாசகம் - திருத்தோணோக்கம் - 10

கல்யாண சுந்தரரின் பாதத்தில் விட்னு தம் கண்ணைப் பறித்து அருச்சித்த அடையாளம் உள்ளது. உற்சவ மூர்த்தியின் வலப்பாதத்தின் மேலே திருமாலின் கண்ணும் கீழே சக்கரமும் உள்ளன.

### திருக்கோயில் அமைப்பு

ஞானசம்பந்தருக்கும், அப்பருக்கும் இறைவன் படிக்காசு வைத்தருளிய பலிபீடங்கள் கோயிலின் கிழக்கிலும் மேற்கிலும் உள்ளன. படிக்காசுப் பிள்ளையார் மேற்கு பலிபீடத்தின் அருகில் உள்ளார். அருகில் சம்பந்தர், அப்பரின் உருவங்கள் உள்ளன. இவ்விருவரும் தங்கியிருந்த திருமடங்கள் வடக்கு வீதியில் கீழ்க் கோடியிலும் (சம்பந்தர்), மேற்குக் கோடியிலும் (அப்பர்)



உள்ளன.

இறைவன், ஞானசம்பந்தருக்குத் தாம் சீகாழியில் இருக்கும் திருக்கோலத்தை இங்குள்ள விண்ணிழி விமானத்தில் காட்டியருளினார். இக்கோயிலில் உள்ள வெளவால் நத்து (வாவல் நெற்றி) மண் வேலைப்பாடுகள் கொண்டதாகும்.

கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. இராச கோபுரம் கடந்து நுழைந்தவுடன் வெளவால் நெத்தி மண்டபம் - கல்யாண மண்டபம் உள்ளது. நடுவில் தூணில்லாமல், சுண்ணாம்பு கொண்டு ஒட்டப்பட்டுள்ள அமைப்பு இரண்டாம் கோபுரத்தைக் கடந்ததும், வெளிச் சுற்றில், படிக்காசு வைத்தருளிய பலி பீடங்கள் உள்ளன. இக் கோயில் மாடக்கோயில் அமைப் புடையது. தெற்கு வீதியில் தலவிநாயகர் (படிக்காசு விநாயகர்) சந்நிதியும், மேற்கில் சேயிடைச் செல்வர்(சோமாஸ்கந்தர்), முருகன், திருமகள் சந்நிதிகளும், வடக்கில் சண்டேசுவரர் சந்நிதியும் உள்ளன. நடராசர் சந்நிதி சிறப்பானது.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 6ஆம், 7ஆம் நூற்றாண்டு கால தொடர்பையுடைய பூநகரி மண்ணித்தலைச் சிவன் கோயில்





ஈழத்தில் பழமையும், இலக்கிய வரலாறும், தொல்பொருட் சின்னங்களும் தாங்கிநிற்கும் ஊர்களுள் பூநகரியும் ஒன்று. இவ்வூர் சைவத் தமிழர்கள், பண்பாடுகளுடன் வாழ்ந்த இடம். காலகாலமாக அரசர்களின் ஆதரவு பெற்று, இராச்சியம் நிறுவப்பட்ட இடமாகவும் விளங்கியுள்ளது. இவ்வூரிலும் அதற்கு அண்டைய ஊர்களிலும் சோழரின் ஆதிக்கம் பரவியமைக்கும், அங்கும் சைவமும் தமிழும் ஓங்கி வளர்ந்தமைக்கும் சான்றாக மண்ணித்தலையில் அமைந்த சிவன் கோயில் விளங்குகின்றது.

### சோழர் ஆதிகாலத்தில் பூநகரி

வட இலங்கையில் சோழராதிக்கம் செல்வாக்குப் பெற்றிருந்த சான்றுகள் மாதோட்டத்தில் கிட்டியது போல் அண்மைக்காலத்தில் பூநகரிப் பகுதிகளில் சோழராட்சி நிலவியமை தொடர்பாக பல சான்றுகள் கிடைத்த வண்ணமும், தொல்லியல் ஆய்வுகள் சில நடந்த வண்ணமும் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 10ஆம் நூற்றாண்டிலிருந்து எழுச்சி பெற்ற சோழவம்சமானது கடல் கடந்து இலங்கை, சாவகம் போன்ற தீவுகளிலும் அரசியல் வர்த்தக உறவுகள் காரணமாக செல்வாக்குப் பெற்றதைத் தொடர்ந்து, இலங்கையில் பொலன்னறுவை, மாதோட்டம், அதனை அண்டிய பூநகரியில் உள்ள மட்டிவாழ், புலச்சேரி ஆகிய இடங்களிலும் சோழரின் அதிகாரம் பரவலாயிருந்துள்ளது. இதற்கு அங்கங்கு கிடைத்துள்ள தொல்பொருட் சின்னங்கள் கட்டியம் கூறுகின்றன.

இலங்கையில் குறிப்பாக 77 ஆண்டுகள் சோழரின் ஆதிக்கம் நிலை கொண்டிருந்த காலகட்டத்தில் சைவசமயமும் அதன் பண்பாட்டு அம்சங்களும் நல்விருத்திநிலை கண்டிருந்தது. சோழர்களின் சைவசமய ஈடுபாட்டால், ஈழத்தின் பல பாகங்களிலும் சைவக்கோயில்கள் தமிழர் கட்டட கலைப்பாணியில் உருவாக்கப்பட்டிருந்தது. சைவம் சார்ந்த கட்டட சிற்பக்கலை மரபுகளும், நாள் வழிபாடுகளும், தானங்களும், வணிககுலங்களின் ஆதரவுகளும் மேலோங்கியிருந்தது. காலப்போக்கில் சோழரின் ஆதிக்கம் இலங்கையில் சரியத் தொடங்கியவுடன், சைவசமயப் பண்பாட்டுச் சின்னங்களான கோயில்கள் சிதைக்கப்பட்டன. சில பேணுவாரின்றியும், கவனிப்பாரின்றியும் அழிவு நிலைக்குச் சென்றன. அத்தகைய கோயில்கள் பலவாக இருப்பினும், அவற்றுள் பூநகரியில் அமைந்துள்ள மண்ணித்தலை சிவன் கோயிலையும் கருத முடிகின்றது.

ஈழத்துச் சைவர்கள் பலரும் பொலன்னறுவையில் சோழர்கள் நிறுவிய சிவன் கோயில்களை மட்டுமே அறிந்துள்ள நிலையில் உள்ளனர். ஆனால் நெடுந்தீவு சிவன் கோயில், மண்ணித்தலை சிவன் கோயில் என்பன பலராலும் அறியப்படாத பழமையும் சிறப்பும் மங்காத தொல்லியல் எச்சச் சிதைவுகளாக விளங்குகின்றன.

### திருக்கோயில் அமைவிடம்

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வடகிழக்குப் பக்கமாகப் பயணமாகினால், பூநகரி என்னும் இடம் காணப்படுகின்றது. அல்லது யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தருவோர் சங்குப்பிட்டிப் பாலத்தைக் கடந்து வருகின்ற பாதையில் சுமார் 7 கிலோமீற்றர் தூரத்தில் இச் சிவன் திருக்கோயிலை அடைந்து கொள்ளலாம். கோயில் சூழல் இயற்கையான வனப்புடன் காட்சி தருகின்றது. சிறுசிறுகாடுகள், ஆங்காங்கு பெரிய ஆலமரங்கள், பனைமரங்கள், வெண்மணல் கொண்ட பல திட்டுக்கள், மண்வாரித் தூற்றும் காற்று ஆகியவை சூழ்ந்த சூழலில் இத் திருக்கோயில் சிதைவடைந்த நிலையில் பெரிய ஆலமரநிழலில் அமைந்துள்ளது.

### திருத்தல வரலாறு

இப்பிரதேசத்தில் வாழும் மக்களினாலும் இத்திருத்தல வரலாறு பற்றி அறியக் கூடிய தகவல்கள் எதுவும் இல்லை. ஈழத்து போர்க்காலத்திற்கு முன்பு ஓரளவு முக்கிய பாகங்களுடன் இக்கோயில் இருந்துள்ளது. அதன் பின்பு இயற்கைச் சீற்றங்களினாலும், கட்டடங்களுள் மரங்கள் வளர்ந்துவிட்ட காரணத்தினால், கட்டடங்கள் வெடிப்புக்குள்ளாகி உதிரிப்பாகங்கள் உதிர்ந்து விட்ட நிலையில், கருவறை, அதில்மேல் அமைந்துள்ள சிதைவடைந்த விமானம், ஒருபக்க மண்டபச் சுவர், இடிந்து வீழ்ந்ததூண்கள் மட்டுமே, இக்கோயிலை சோழர் காலத்துக்குரியது சிவன் கோயில் என்று கருதக்கூடிய எச்சங்களாக உள்ளன.

இக்கோயில் பல்லவர், பாண்டியர் மற்றும் முற்காலச் சோழர் கலைப்பாணியைத் தழுவிக் கட்டப்பட்டு இருப்பதனால் ஆய்வாளர்கள், இக் கோயில் சரியாக எந்தக்காலத்திற்குரியது என்பதில் மாறுபாடான காலக்கணிப்பைத் தெரிவித்துக் கொள்கின்றனர். எது எப்படி இருப்பினும் கட்டடம் ஆக்கப்பட்ட மூலப் பொருட்களான செங்கட்டிகள், கடல் கோறைக்கல், சுண்ணாம்புச் சுதை ஆகிய வற்றைக் கொண்டு பார்க்கும் போது இது மண்டணிக் கோயிலாகும்.


சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

இக்கோயிலை முதல்முதலில் 1993ஆம் ஆண்டு சோழர்காலத்துக்குரிய சிவன் கோயில் என்று அடையாளம் காண்பித்தவர், யாழ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் புஷ்பரட்ணம் அவர்களாகும். அதன் பின்பு அங்குள்ள கிராமவாசிகள் இக்கோயிலைப் புனரமைக்க முன்வந்தபோது, தொல்லியல் திணைக்களம் அம்முயற்சியைத் தடுத்து நிறுத்தி, (12-06-2015) அன்று தொல்பொருட்சின்னமாக, அது சார்ந்த திணைக்களம் அறிவித்துள்ள நிலையில், இன்றுவரை இக் கோயிலைப் பற்றிய ஆய்வுகளோ, புனர் நிர்மாணப்பணிகளோ, வழிபாடுகளோ நிகழ்த் தப்படாமல் இருப்பது வேதனைக்குரியதாகும்.

### திருக்கோயில் அமைப்புக் கூறும் செய்திகள்

கோயில் அமைப்பினை நோக்கும் போது தமிழர் கட்டிடக்கலை மரபுக்கேற்பவே அமைந்துள்ளது. ஆரம்பகாலத்தில் பல்லவர், பாண்டியர், முற்காலச் சோழர் காலத்திற்குரிய அமைப்புக்கள் கட்டடத்தில் தென்படுகின்றது. தமிழ் நாட்டில் மிக பழமையான சிவன்கோயில்கள் மண்கொண்டே உருவாக்கப்பட்டன. இவற்றை மண்டணிக் கோயில் என்ற அழைப்பர். மண்ணித்தலைச் சிவன்கோயிலில் பயன்படுத்தியிருக்கின்ற கற்களை நோக்கும்போது அவை செங்கட்டிகளாகவும், கடலில் இருந்து எடுக்கப்பட்ட கோறைக்கற்களாகவும் உள்ளன. அவற்றோடு சுண்ணாம்பு, சுதை ஆகிய மூலப்பொருட்களையும் உபயோகப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் நாயன்மார்களால் பாடல் பெற்ற ஆரம்பக் கோயில்களும் மண்டணிக் கோயில்களாக இருந்துள்ளன. அப்படிப் பார்த்தால் இக் கோயில் 6ஆம், 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கருதிக்கொள்ள இயலும்.

இத்திருக்கோயில் 24 அடி நீளமும், 42 அடி அகலமும் கொண்டது. கருவறை அமைப்பை நோக்கும்போது பல்லவர், சோழர் கலைப்பாணி தென்படுகின்றது. கோயிலின் கருவறை வெளிச்சுவரில் உள்ள தூண்கள் 7 அடி உயரம் உடையது. ஆரம்பகால பல்லவர் கோயில் தூண்களும் 7 அடி உயரம் உடையவைதான். மற்றும் கருவறைச் சுவரில் தேவகோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இது பிற்கால பல்லவர் சோழரின் கலைப்பாணியை நினைவுபடுத்துகின்றது.

விமானம் 3 அடுக்கு கொண்டதாக அமைந்துள்ளது. மேலே தூபி நிறுவப்பட்டிருக்கும் பகுதியானது. வட்டவடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாள கருவறையுடன் இணைந்த விமானத்தின் உயரம் 14 அடி உயரமுடையதாகத் தெரிகின்றது. விமானம் பிற்கால பல்லவர், பாண்டியரின் கலைப்பாணியையும் முற்காலச் சோழரின் கலைப்பாணியையும் தழுவியதான கலைமரபைக் காட்டி நிற்கின்றது. இது 8ஆம் 10ஆம் நூற்றாண்டுக்குரியது எனவும் கொள்ளலாம். எனவே கோயில் அமைப்பு கூறும் செய்திகளின்படி இக்கோயில் 7ஆம் நூற்றாண்டுக்கும் 10ஆம் நூற்றாண்டுக்குரிய காலத்தனவாக கணிக்க முடியலாம்.

திருச்சிற்றம்பலம்




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Importance of Tamil Names

Naming a child is a culturally rich tradition that carries immense significance in shaping an individual's identity. A name is not just an order of letters but rather holds a deep meaning that reflects the culture and ancestors of the society before it. Names should have historical, cultural, or familial significance, connecting individuals to their roots and providing a sense of identity. It is essential, that we continue to provide meaningful Tamil names to future generations to extensively preserve and connect to Tamil culture.

Tamil names play the essential role of carrying the legacy of a culture that has flourished for millennia. By choosing meaningful Tamil names for future generations, we are actively participating in the preservation and transmission of this rich cultural heritage.

Most meaningful Tamil names have roots in classical literature, historical events and religious texts, serving as a testament to the values and traditions that have shaped Tamil society.

Language serves as the heartbeat of culture, and Tamil stands as the oldest and most vibrant language and culture. Meaningful Tamil names contribute to the preservation of this linguistic treasure. As we name children with words that behold profound meaning, we instil a sense of linguistic connection, ensuring that the eloquence of the Tamil language continues to resonate through the generations.

Tamil names create a sense of personal significance and promote individuality. These names are intricately chosen, reflecting not only linguistic and cultural aspects but also individual traits and aspirations. Names are often based on positive qualities, auspicious meanings or familial connections. This personalised approach to naming adds a layer of significance, instilling a sense of pride and meaning within the child


In conclusion, the act of naming future generations with Tamil names transcends just basic nomenclature. It should be a deliberate and significant choice that contributes to the preservation of cultural heritage, the promotion of linguistic identity, and the fostering of individual pride. When continuing to name future generations with meaningful Tamil names, embrace the depth and richness of our Tamil cultural legacy, ensuring that each name guides future generations with a strong sense of identity, purpose, and cultural continuity.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva P.Abiram SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanmars. Sampathar's entire collection of hymns about Lord Shiva is called "Thirukkadaikappu". These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.



The Jains once chall enged Sampanthar to a challenge, the Jains explained that both parties had to write a song on a palm leaf and put it in the Vaikai river in Madurai. Whichever leaf swam against the current of the flood would be considered as the victor. They all came to the Vaikai river and the Jains started to write their song on their palm left, when they placed it in the water it flushed away into the sea. Sampanthar wrote a hymn beginning with the words "Valka Anthanar" it goes as follows:

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

Valka Anthanar Vaanavar aaninam
Veelga thannpunal venthanum onguka
Aalga theeyathel laamaran naamame
Suulga vaiyaka munthuyar theerkave

Sampanthar placed his palm leaf into the water and the Palm leaf swam against the current. Sampanthar sang one more song to stop the floating leaf and it goes as follows:

ஆற்றின்மேற் செல்லு மேடு தொடர்ந்தெடுப் பதற்கு வேண்டிக்
காற்றென விசையிற் செல்லுங் கடும்பரி யேறிக் கொண்டு
கோற்றொழி றிருத்த வல்ல குலச்சிறை யார்பின் சென்றார்
ஏற்றுயர் கொடியி னாரைப் பாடினா ரேடு தங்க.

Aattrinmet sellu medu thodarnthedup pathatku venndik
Katrena visaiyit sellung kadumpari yetrik kondu
Kottroli drirutha valla kulachirai yarpin sendrar
Ettruyar kodiyi naraip padina redu thanga

The leaf stopped at Thiruvedakam, and when they picked it up the Jains admitted to losing and accepted a punishment for losing the challenge.

# அரன்பணி எனும் அரும்பணியாற்றும் ஞானாசிரியர் சிவ. பவானி அ. தியாகராசன் ஐயா அவர்கள்

உலகத்திலே கால தொன்மையும் சாலப் பெருமையும் உடைய தன்மையன் என்று அறிய வெளிவந்த, இறை அருளிய முடிந்த முடிவே சிவநெறி. அந்நெறியினைப் போற்றி விளங்குபவர்கள், திருவருளின் ஞான அருள் பெற்று, காலந்தோறும் நிலவுலகிற்கு இறைவனால் அனுப்பப் பெறுவர். அவ்வகை உணர்வு பெற்ற ஒருவராய் வந்து தோன்றியவரே! சிவனடியார் திருக்கூட்டத் தலைவர், சிவத்திரு. பவானி தியாகராசர் ஐயா அவர்கள்.

கொங்கு நாட்டில் வாணியாறு, காவிரி ஆறு, அமிர்த்த ஊற்று எனும் நதிகள் கூடும், கூடுதுறையிலே முன்னை தவத்தால் நல்வினைப் பயனால் மூத்த பிள்ளையாய் சிவத்திரு. அய்யாவு அவர்களுக்கும், தெய்வத்திருமதி. கண்ணம்மாள் அவர்களுக்கும் தோன்றினார். அவருக்கு பெற்றோர் சூட்டிய திருப்பெயர் தியாகராசன். பிள்ளைப் பருவம் தொட்டு விடலைப் பருவம் வரை, பண்ணார் மொழியம்மை உடனாய் திருநணாவுடையார் திருக்கோயிலிலே தந்தையாருடன் இணைந்து, சரியை திருப்பணியில் ஆழ்ந்திணைந்தார். பள்ளிப் படிப்பை முடித்து, கல்லூரி செல்லும் போது உலகியல் கல்வியின் நற்பயன் அரிதென உணர்ந்து, மெஞ்ஞானக் கல்வியிலே நாட்டம் கொண்டு, பேராசிரியர் முனைவர், சிவத்திரு.வையாபுரியார், பேராசிரியர் முனைவர்.சிவத்திரு. சென்னியப்பனார் போன்ற சான்றோர் பெருமக்களிடத்து சமய மெஞ்ஞானம் பெற்றார்.

திருமதி. கீதா என்னும் சேரநாட்டு மங்கையினை மணங்கொண்டார். வழுவாது திருநணா அறுபத்து மூவர்க்கும், திருவிளக்கிடும் திருப்பணியை தினந் தோறும் செய்து வருபவர். பெருமான், இருவருக்கும் நமசிவாயம் என்னும் திருமகவு அருளினார். அருட்குருநாதர் ஒளியகம் சிவத்திரு. ஆடலரசு ஐயா அவர்களிடம் சமயதீக்கையும், ஒளியகம்


சிவ. பவானி அ. தியாகராசன்

சிவத்திரு. ஒளியரசு ஐயா அவர்களிடம் விசேடம், நிர்வாண தீக்கை, ஆசாரிய அபிடேகமும் பெற்று, அன்றாடம் சிவ பூசையினை முறைப்படி ஆற்றி வருபவர்.

யான் பெற்ற பேறு இவ்வையகமும் பெறவேண்டு மென எண்ணி, திருக்கோயிலுக்கு வரும் சிறார்களில் ஆர்வலர்களுக்கும், ஆர்வம் மிக்கோர்க்கும், சமய சாத்திர வகுப்புகளையும், சித்தாந்த வகுப்புகளையும், திருவாசகம், திருமுறைகளையும் கற்றுக் கொடுத்து வந்தார்.

“திசையனைத்தின் பெருமையெல்லாம் தென் திசையை வென்றேற அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல” என்ற சேக்கிழார் சுவாமிகளின் வாக்கினை ஏற்று, தீந்தமிழ் மரபே தலைசிறந்தது என்பதை உணர்த்தும் வண்ணம், எமது மரபு வழிபாட்டினை வலியுறுத்துவது மட்டுமல்ல, திருக்கூட்ட அன்பர்களோடும்


ஐயாவின் குடும்பத்தினருடன் தென்னாடு முதல்வர்

இணைந்து ஆற்றி வருகின்றார்.

### ஐயாவின் சமய வகுப்புகள்

சமகாலத்தில் திருமுறை மற்றும் சைவ சித்தாந்த வகுப்புகள் எடுப்பதில் ஐயாவின் பங்கு அளவிடற் கரியதாகும். அதிலும் குறிப்பாக சைவ சித்தாந்தக் கருத்துக்களை திருமுறையிலிருந்து மேற்கோள்காட்டி கேட்பவர் மனதில் சாத்திர உண்மைகளை ஆழமாக பதிய வைப்பதில் சிறந்தவர். இதன் காரணமாக ஐயாவினுடைய சித்தாந்த வகுப்புகளை கேட்பதற் காகவே அடியார் பெருமக்கள் தமிழகத்தின் பல இடங்களுக்கும் சென்று வகுப்புகளை கேட்டு வருகின்றனர். ஐயாவின் பெரியபுராண வகுப்புகளை ஒருமுறை கேட்டால் நிச்சயமாக மூல நூலை முழுமையாக படித்த ஒரு தெளிவு பிறக்கும் என்பது திண்ணம். ஏனெனில் ஐயா அவர்கள் ஆரம்பத்தில் இருந்து படிப்படியாக திருமுறை, அதிலும் பெரிய புராணம், அதன்பிறகு சித்தாந்த நூல்கள், பண்டார சாத்திரங்கள் முதலிய சைவ நூல்களினை பெரும் பேராசிரியப் பெருமக்களிடம் நன்கு கற்று உணர்ந்தவர்.

திருவள்ளுவர் திருக்குறளிலே சிறப்பான ஒரு கருத்தை வெளிப்படுத்துவார்.

**“விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்.”**

**(அதிகாரம்: சொல்வன்மை குறள் எண்:648)**

என்பது அக்குறளாகும். இதன் பொருள், **“கருத்துக்களை ஒழுங்காகக் கோர்த்து இனிதாக சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும்”** என்பதாகும்.

இதனைக் குறிப்பிட காரணம் யாதெனின் ஐயா வின் சொற்பொழிவுகள் மற்றும் வகுப்புக்களை கேட்டு, திருமுறை வழியில் நின்று பல்வேறு அடியார் பெருமக்கள் சைவத் தொண்டாற்றியும், தாங்களும் ஒரு சித்தாந்த ஆசிரியராக தகுதிப்பாடு அடைந்தும், அவருடைய அறப்பணிகளில் ஈடுபட வேண்டும் என்ற நோக்கத்தோடு உருவாகிக் கொண்டே இருக்கிறார்கள். எனவே அவரிடமிருந்து வெளிப்படும் சொற்களானது இறைவனுடைய அருளிலிருந்து வெளிப்படுவதால், அச்சொற்கள் யாவுமே கேட்போர் மனதில் ஒரு மாற்றத்தை உருவாக்கி அவர் சொல்லாமலேயே பல்வேறு அறப்பணிகளில் ஈடுபடுவதற்கான ஒரு நற்செயலை இயல்பாகவே ஏற்படுத்தி விடுகின்றது. எனவே வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப தன்னுடைய வாழ்வை இறையருளால் அமையப்பெற்றவர் சிவத்திரு பவானி தியாகராசன் ஐயா என்பதை நாம் உணர முடிகிறது.

ஒரு நூலைப் படித்து அந்த நூலின் வழி நின்று, அதனை பிறருக்கு பயிற்றுவிப்பது என்பது மிக அரிதான ஒன்றாகும். திருமுறை மற்றும் சித்தாந்த நூல்களை கற்பதோடு நின்று விடாமல், அவை சொல்லக்கூடிய கருத்துக்களை உள்வாங்கி அந்த நெறியில் நின்று, தன்னுடன் சேர்ந்து பயணிப்பவர் களையும் சைவ நெறியில் ஆற்றுப்படுத்தி அரவ ணைத்து செல்வதில் சிறந்தவர் தியாகராசனார். அதன் காரணமாகத்தான் இன்று “அரன்பனி அறக்கட்டளை” என்ற அமைப்பினை நிறுவி அதன் மூலமாக தொடர்ந்து பல சிதலமடைந்த சிவன் கோயில்களை மீட்டு, பழமை மாறாமல் புதுப்பித் தும், மிக அரிதான செயல்களை இறையருளால் தொடர்ந்து செய்து வருகின்றார்.

திருமுறைப்பணி, திருக்கோயில்பணி என்று இடைவிடாது பயணிக்கக் கூடிய தியாகராசன் ஐயா அவர்கள் ஒரு திங்களில் மட்டும் தமிழகத்தின் ஏழு பகுதிகளுக்கு மேலாக வகுப்புகள் நடத்தி வருகிறார்.

**வகுப்பு நடைபெறும் இடங்கள்:**

**பெரியபுராண வகுப்புகள்** - கமல விநாயகர் சத்சங்கம், சென்னை. நால்வர் அரங்கம், திருப்பூர். ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்.

**சைவ சித்தாந்த வகுப்புகள்** - கமல விநாயகர் சத்சங்கம், சென்னை, தமிழ்ச்சங்கம், ஒடுக்கத்தூர் மடம், பெங்களூார், வரசித்தி விநாயகர் ஆலயம், பாண்டிச்சேரி, பன்னிரு திருமுறை மன்றம், சேலம்.

**திருமுறை வகுப்பு** - நம்பியாரூரர் திருமடம், பவானி.

மேலும் சிங்கப்பூர் நாட்டிற்குச் சென்று தொடர்ந்து சித்தாந்த வகுப்புக்களை நடத்துவதோடு மட்டுமின்றி காணொளியின் ஊடாகவும் திருமுறை மற்றும் சித்தாந்த நூல்களின் பொருள்களை உலகெங்கும் கொண்டு செல்லக்கூடிய பெருந் தொண்டினையும் இறையருளால் செய்து வருகிறார்.

நிறைவாக நமது தமிழ்ச் சமூகத்திலே பல்வேறு வகையான வழிபாட்டு முறைகள் உள்ளன. ஆயினும் நமது மெய்ச்சமயமாகிய சைவ சமயத்தை பின்பற்றுவதில் பலரின் மனம் ஈடுபடுதல் தற்காலச் சூழலில் பெருகி வந்தாலும், அதற்கு மேலாகவே புறச்சமயங்களுக்கு நம்மவர் மதமாறும் நிகழ்வுகளும் நடந்த வண்ணம் உள்ளன. அதற்கு காரணம் நமது சமயத்தின் உண்மை கருத்துக்கள் எளிய மக்களிடம் செல்லாமையே. அதனைக் களைய வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. பவானி தியாகராசன் ஐயாவினைப் போன்ற பெரியவர்களின் வாழ்க்கையினை அறியும்போது, நாமும் நம்மால் முடிந்த அரும்பணிகளை நமது மொழி மற்றும் சமயத்தின் ஊடாக நம்மவர்க்கு செய்ய வேண்டும் என்ற எண்ணங்களை வளர்த்து, அதனை செயலில் கொண்டு வர வேண்டும். எண்ணம் செயலானால் எல்லாம் நமதாகும்.

**“மேன்மைகள் சைவநீதி விளங்குக உலகமெலாம்”**

**திருச்சிற்றம்பலம்**

**தொகுப்பு:**
**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவடம், கொக்குவில், யாழ்ப்பாணம்.**

# தென்னாடு ஐம்பூதநாதர் மீது அருளப்பட்ட திருத்தாண்டகம்



இலங்கையில் வீற்றிருக்கும் இறைவன் கண்டாய்!
இரும்பூளைக் கோயிலுறை எம்மான் கண்டாய்!
வலங்கையில் மழுவேந்தும் வரதன் கண்டாய்!
மண்ணினில் ஐந்தாக வதிவான் கண்டாய்!
சலங்கையில் நாதவொலி நம்பன் கண்டாய்!
சத்திமனோன் மணியின் வலத்தான் கண்டாய்!
அலங்கையில் அருள்புரியும் அய்யன் கண்டாய்!
ஐம்பூத நாதராம் அண்ணல் தானே! (1)

பார் நீரில் தண்மையாகப் பதிந்தான் கண்டாய்!
பார்வதியாம் மனோன்மணி பாகன் கண்டாய்!
தேர்நீரில் நிழலாகத் திகழ்வான் கண்டாய்!
தேவாரப் பாடல்களின் தேவன் கண்டாய்!
கார்நீரில் மேகமாய்ப் பொழிவான் கண்டாய்!
காடிடமாய் ஆடுகின்ற கடவுள் கண்டாய்!
ஏர்நீரில் நான்காய் இருப்பான் கண்டாய்!
ஐம்பூத நாதராம் அண்ணல் தானே! (2)

செந்தீயின் நிறமாகத் திகழ்வான் கண்டாய்!
செருநரின் புரமெரித்த செம்மல் கண்டாய்!
வந்தீயும் கோணமாமலை வள்ளல் கண்டாய்!
வரந்தரும் கேதீச்சர வரதன் கண்டாய்!
பந்தேயும் விரல் மடவாள் பாகன் கண்டாய்!
பரங்குன்றின் அருள்புரியும் பரமன் கண்டாய்!
அந்தீயின் மூன்றாக அமர்ந்தான் கண்டாய்!
ஐம்பூத நாதராம் அண்ணல் தானே! (3)

கடல்கொண்ட தென்னாட்டின் கடவுள் கண்டாய்!
கருதுவார் உள்ளத்தே கருத்தன் கண்டாய்!
உடல்கொண்ட உயிர்க்குயிராய் உள்ளான் கண்டாய்!
உலவுவளி இரண்டாக உகைப்பான் கண்டாய்!
மடல்விண்ட தாழம்பூச் சூடான் கண்டாய்!
மதுரையின் தமிழ்ச்சங்கப் புலவன் கண்டாய்!
அடல்கொண்ட விடையூர்த்தி அறவன் கண்டாய்!
ஐம்பூத நாதராம் அண்ணல் தானே! (4)

செந்தமிழா கமச்சிவ மடத்தான் கண்டாய்!
செங்கோட்டின் மாதொரு பாகன் கண்டாய்!
பைந்தமிழா லோடமோடப் பார்த்தான் கண்டாய்!
பழுநீல ஆகாயத் தொன்றான் கண்டாய்!
நந்தமிழால் கொடியேற்ற நயந்தான் கண்டாய்!
நற்றமிழின் நால்வர்க்கு நாதன் கண்டாய்!
அந்தமிழால் தாளம்பெற அளித்தான் கண்டாய்!
ஐம்பூத நாதராம் அண்ணல் தானே! (5)

தென்னாடு டையசிவ பெருமான் கண்டாய்!
தெய்வத்தமிழ் திருமுறைகள் ஆனான் கண்டாய்!
பொன்னாடு விண்ணாட்டின் புனிதன் கண்டாய்!
பெருந்துறையின் மணிமொழியார் பெட்பன் கண்டாய்!
தன்னாடு சிவலோகமாயக் கொண்டான் கண்டாய்!
தண்டமிழின் சுரந்தீர்த்த தக்கோன் கண்டாய்!
என்னாடும் வணங்கும் ஏற்றன் கண்டாய்!
ஐம்பூத நாதராம் அண்ணல் தானே! (6)

கொக்குவில் குடிகொண்ட குழகன் கண்டாய்!
கொடுஞ்சூலை நோய்தீர்த்த கொற்றன் கண்டாய்!
தக்கவில் இராமற்குத் தலைவன் கண்டாய்!
தருமபுரம் பிரமபுரம் தம்மான் கண்டாய்!
இக்குவின் சாறாக இனிப்பான் கண்டாய்!
இலங்கையில் பலகோயில் அமர்ந்தான் கண்டாய்!
அக்குவின் மணியணிந்த அம்மான் கண்டாய்
ஐம்பூத நாதராம் அண்ணல் தானே! (7)

முந்தெழுத்தின் அகரமாய் ஆனான் கண்டாய்!
முத்தேவர் தேவர்க்கு மூத்தோன் கண்டாய்!
கந்தரத்தின் விடமடக்கும் கடவுள் கண்டாய்!
கண்ணப்பர் கண்ணப்பக் கண்டான் கண்டாய்!
அந்தரத்தின் திரிபுரத்தை அழித்தான் கண்டாய்!
அவிநாசி மதலையை மீட்டான் கண்டாய்!
ஐந்தெழுத்தின் பொருளாக அணைந்தான் கண்டாய்!
ஐம்பூத நாதராம் அண்ணல் தானே! (8)

பூவினில் நாற்றமாய்ப் பொலிவான் கண்டாய்!
பூவணத்தில் பொன்னனையாள் போதன் கண்டாய்!
நாவினில் ஐந்தெழுத்தாய் நயப்பான் கண்டாய்!
நாவலூர் மூவலூர் நாதன் கண்டாய்!
தேவினில் தலைவனாய்த் திகழ்வான் கண்டாய்!
தேரிலங்கைச் சிதம்பரக் கூத்தன் கண்டாய்!
ஆவினில் ஐந்தாடும் ஆன்றோன் கண்டாய்!
ஐம்பூத நாதராம் அண்ணல் தானே! (9)

தேராரும் ஆரூரின் தேவன் கண்டாய்!
தெளிதமிழின் திருமுறையில் திளைப்பான் கண்டாய்!
ஊராரும் அடியார்கள் உளத்தான் கண்டாய்!
உரைநிறை சாத்திரத்தின் பொருளன் கண்டாய்!
பாராரும் பண்புடைய பரமன் கண்டாய்!
பகவனாய் ஆதியாய் பருணன் கண்டாய்!
ஆராரும் மனோன்மணி பாகன் கண்டாய்!
ஐம்பூத நாதராம் அண்ணல் தானே! (10)

**இயற்றியவர்**
**முனைவர்.ந. இரா. சென்னியப்பனார்**
**தலைவர் - மணிவாசக அருட்பணிமன்ற அறக்கட்டளை**
**5/460 சாந்தலிங்கர்நகர்,**
**பேரூர் - கோவை 641010,**
**தமிழ்நாடு.**



முனைவர். ந. இரா. சென்னியப்பனார் ஐயாவினால் இயற்றப்பட்டு 20-12-2023 அன்று அவரது இல்லத்தில் வைத்து தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட முதல்வர் தென்னவன் பார்த்தீபன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

# Does the Lord Almighty exist? Scenic beauty on the way from Temple

**Last month Summary:**
Sivakan, a 7 year old kid, went to a temple festival with kith and kin. After worshipping god on his way home he passed through mountains, rivers and was enjoying nature. He was asking himself, "How did this scenic beauty that I have been enjoying come to exist? Do they exist on their own without being created by anyone?" This made him deep silence at home.

Now,

On learning about my return from the temple festival, all the neighborhood children eagerly rushed to meet me. They were happy to look at all the things I bought in the fair.

I demonstrated to them how the toy plane actually flew up in the air for sometime before landing. The children's joy knew no bounds on seeing a flying toy aeroplane. They tried to fly the toy plane themselves one by one. I passed on the information given by the shopkeeper that it was made in Puduchchery by a skilled craftsman. One of the boys exclaimed in wonder, "This little plane itself flies up in the air so beautifully.

Yesterday I saw a real aeroplane flying over our village. What an intelligent and smart person he must be, to have built that real huge plane!" I kindled their innate inquisitive nature further.

You are quite right! See, there are beautiful mountains to our west, endless sky above, earth below, groves and plantations nearby, and flowing river around us. Who must have created



all these?'

Immediately one of my friends replied, 'I have read that these are all part of nature.? Now I showed them the photograph of the Mahatma. 'OK.

Now look at this photograph. So far we have been talking about things that we are actually seeing with our eyes. Do you believe in what you see in this photograph?'

'This is a photograph. So we can infer that this must have been clicked by somebody.'

'How can you say that?'

'I have already seen somebody taking a photograph. Hence can it not be inferred that this

being a photograph, somebody must have taken this photograph?'

'Accepting that the aeroplane is made by someone, is it not logical to ask who must have created the mountains, river, earth etc. in the world?'

'I am not so sure about that.'

Showing him the painting of Lord Muruga, I asked him, Now, look at this painting of Lord Muruga. Don't you think somebody must have painted it?'

'Oh yes, I agree to what you say. The names of the painter and the printing press are given

at the bottom of the picture itself.' 'Do you believe that, at least?'

He said that since it is written there for everyone to see, it is to be accepted.

Now I went back to my question based on these conclusions. 'We might not have seen (the creator of this world) directly with our own eyes. We might not have decided logically through inference. But can we not faithfully accept the existence of the creator of this world based on the statements of those who have recorded their experiences?'

My friend did not seem to agree with my viewpoint. 'Let us discuss about it later,' so everyone dispersed to their houses.

**Saiva Philosophy Reference:** That which exists has no action without an actor; world is a created entity and it has a creator - (Ullatharku Seyvonindri...)'- Sivajnanan Botham 1, Aphorism 2 is explained in this story.

# நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்


**நாவலர் தம் பின்னணி**

இவர் தம் மரபு யாழ்ப்பாணத்து நல்லூரிலே பன்னெடுங்காலம் தொடர்ந்து நிலவியது. போர்த்துக்கீசர் வணிகத்தில் தனியாட்சி செலுத்தினர். இதனை அறிந்த ஆங்கிலேயர் மற்றும் டச்சுகாரர் இந்தியாவில் வணிகம் செய்யத் தொடங்கினர்கள். கிட்டத்தட்ட கி.பி 1600 ஆம் ஆண்டில் சூரியன் மறையாத இராச்சியமாக இருந்த பிரித்தானியாவின் அரசியாகவிருந்த மகாராணி எலிசபெத்து அம்மையார் அளித்த கடிதத்தின் அடிப்படையில் அண்ணளவாக நூறு ஆங்கிலேய வணிகர்கள் ஒரு குழுவாக உருவாகினர்.

இந்தியாவில் ஏற்பட்ட மாற்றம் ஈழத்தின் வடபாலிலும் உருவாகியது. பதினேழாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் என்போரினது ஆட்சி நிறைவுபெற்று, பிறிதொரு ஐரோப் பியரான டச்சுக்காரரின் ஆட்சி நிலவியது. ஐரோப்பியர்கள் தமது நோக்கத்தில் இருந்து மாறமாட்டார்கள் என டச்சுக்காரர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர். ஏனெனில் இவர்களும் வணிகத்திலும் தம் சமயத்தைப் பரப்புவதிலிருந்து ஒரு அடி கூட பின்னடையவில்லை. டச்சுக்காரர் காலத்திலும் சரி எவரது காலத்திலும் சுதேசிகள் தங்கள் உரிமையோடு வாழ முடியவில்லை, சம காலத்திலே ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சம்பவம் ஒன்று இடம்பெறக்காத்திருந்தது.

ஞானப்பிரகாச மரபு இலங்கையில் வாழ்ந்த காவல முதலியாரினால் பேணப்பட்டு வந்தது. இவர் தனது இரத்தத்தில் ஊறிய மொழியாக விளங்கும் தமிழ் மொழியையும் மகத்தான தொழிலான மருத்துவப் புலமையயும் உடைய வர். இவரது திறமையை வெளிக்கொண்டு வருவதற்காக சித்தன் சிவன் தகுந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

அதாவது ஈழத்தையாண்ட அக்காலத்து டச்சுக்கார மன்னனுக்கே தீராத நோயினால் வருத்தப்பட்டான். மேல்நாட்டு மருத்துவக் கலையில் கைதேர்ந்த பலரும் எந்த முறையில் முயற்சித்த போதிலும் அது பயனளிக்கவில்லை.



இந்த நிலைமையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காவலரின் புகழ் அக்கால டச்சுமன்னனின் காதை எட்ட அவ் மன்னனும் தன் அரச சபைக்கு வரவழைத்து அவரை மருத்துவம் பார்க்க வைத்து, அவரது மருத்துவமே தம் வாழ்வின் மறுபக்கத்தை காட்டியதாகவும். ஆங்கிலேய மருத்துவத்தையும் விட ஆயுள்வேத மருத்துவமே சிறந்தது என தன்வாயினாலே டச்சுக்காரர் கூறினார்.

இவரது மருத்துவத்தின் மகிமை அறிந்து இவருக்கு அன்று முதல் 'முதலியார்' என்னும் பட்டம் வழங்கப்பட்டதுடன், தன் அரச குடும்ப மருத்துவராகவும் இவரை நியமித்தார். இவர் தாம் இல்லற வாழ்க்கையில் இணைந்து ஒரே மகனான பரமானந்தர் என்பவரைப் பெற்றெடுத்து, அவரையும் மருத்துவத்துறையில் சிறந்த ஒரு மருத்துவராக ஆக்கினார். முதலியாரின் போரனான கந்தப்பிள்ளை என்பவர், தமிழ்தன்மை மிகுந்தவராய் சர்க்காரில் அலுவல் புரிந்தார். இவர்களது பரம்பரை தொழிலாக விளங்கிய மருத்துவத்தொழிலை இவரும் செய்து வந்தார். தந்தை மற்றும் தந்தையினது தந்தையின் மருத்துவ அறிவை மிஞ்சும் அளவிற்கு இவர் அறிவு படைத்திருந்தார். மருத்துவத்தினை பிறரும் பயின்று பயன்பெறும் வண்ணம் வசனமாக எழுதினார். அவர்தம் ஓய்வுக்காலத்தினை வீணாகக் கழிக்காமல் இயற்கை நேயராக காணப்பட்டிருந்தார். பூங்கா வளர்ப்பினில் மிகுந்த விருப்பமுடையவராக இவர் காணப்பட்டிருந்தார்.



சிவ.யதோட்சயன்
மங்களேச்வரன்
தரம் 11,
யாழ் மத்திய கல்லூரி

அது மட்டுமன்றி இவர் நாடகங்களை இயற்றியும், பல நூல்களை வசனநடையில் மொழிபெயர்ப்பும் செய்துள்ளார். இதன் மூலம் தமிழிற்கு சிறந்த முறையில் தொண்டாற்றினார். இவ்வளவு சிறப்பும் பெருமையுமுடைய நுண்மான் கந்தப்பிள்ளை அவர்களே யாம் போற்றும் நல்லை நகர் நாவலர் அவர்களினது தந்தையார் ஆவார். சைவம் மற்றும் தமிழைப் பாதுகாப்பதற்காக தனது பதினொராவது பிள்ளையே அதற்குப் பொருத்தமானவர் என ஈன்றெடுத்தவர் சிவகாமி அம்மையார் ஆவார். இவர் 1822 ஆம் ஆண்டு தொன்மை மொழியான தமிழையும் சைவத்தையும் காப்பதற்கான விதை இந்த நல்லையிலே இடப்படுகின்றதன் அமைவாக, "எத்தனை ஞானியர் பிறந்தாரை அவர்களை விஞ்சிட உனக்கு ஏது தடை" என நிருபித்துக்காட்டினார். யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தவரே ஆறுமுகன் என்ற பிள்ளைத் திருநாமமுடைய நமது நாவலர் பெருமான்.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

# தென்னாட்டு நிகழ்வுகள்



சுத்த சைவ நூலாசிரியர் தென்னாட்டிற்கு வருகை (16-12-2023)



கொக்குவில் இந்துக் கல்லூரி அண்ணாமலையார் திருக்கோயில் சங்கு நீராட்டு (03-12-2023)



கார்த்திகைத் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (27-11-2023)



ஆறுமுக நாவலர் குருபூசை (04-12-2023)



வண். பண்ணை ஓட்டுமடம் பாலவைரவர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு (10-12-2023)



திருகோணமலை சம்பூர் அடியார்கள் தென்னாட்டில் வழிபாடு (17-12-2023)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நாற்பதாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 8ம் நாள் அன்று (24-12-2023 ஞாயிற்றுக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org